வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 06.09.2023 புதன்கிழமை | இதழ் : 270 | பக்கங்கள் : 16

## பிடிக்கும் மீன்களை தங்கள் நாட்டுக்கே ஏற்றுவதற்கு அனுமதி கோரும் சீனர்கள்!

### கடற்றொழில் அமைச்சரிடம் விடுத்தனர்

கொழும்பு, செப். 06

தமது படகுகள் மூலம் பிடிக்கும் மீன்களை தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய விரும்புவதாக சீன முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சீனாவை சேர்ந்த முதலீட்டாளர்கள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, தாம் கடற்றொழில் துறையில் முதலீடுகளை செய்வதற்கும் தமது படகுகள் மூலம் பிடிக்கும் மீன்களை தமது நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் விரும்புவதாகத் தெரிவித்தனர்.

தமக்கான அனுமதிகளை கடற்றொழில் அமைச்சு வழங்குமானால் இந்தத் துறையில் பெரும் முதலீடுகளை செய்வதற்கும் தாம் தயாராகவுள்ளதாக சீன முதலீட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதற்கு அமைச்சர், குறித்த குழுவினர் தமது திட்டவரைவை வழங்கினால் இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதாக கூறினார்.

இந்த இரு தரப்பு சந்திப்பில் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரும் பங்கேற்றனர். (ஐ)



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் கார்த்திகைத் திருவிழா தினமான நேற்று முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக எழுந்தருளியபோது...! (படம் - லி. ஜெகன்)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்:

## பிரதான சூத்திரதாரியை அறிய சர்வதேச விசாரணை அவசியம்!

### எதிர்க்கட்சி தலைவர் வலியுறுத்து



கொழும்பு, செப்ரெம்பர் 06

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை கண்டறிய சர்வதேச விசாரணையொன்று அவசியமாகும். அதனை செய்வதற்கு இந்த அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இல்லை என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்று ஒன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், "கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக நான் போட்டியிட்டிருந்தேன். பேராயர் கர்தினால், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூறியிருந்தார்.

11

## ஆட்சியை பிடிப்பதற்காக சொந்த மக்கள் கொலை!

### சனல் 4 தொலைக்காட்சி

கொழும்பு, செப். 06

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பிலான பல அதிர்ச்சித் தகவல்களை பிரித்தானியாவின் சனல்-4 இல் நேற்று வெளியான முன்னோட்ட காணொலியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த ஆஸாத் மௌலானா குறிப்பிட்டுள்ளார்.

11

## பொலிஸ் மா அதிபரின் சகோதரர் நல்லூர் ஆலயத்தில் அத்துமீறல்!

### பொலிஸார், மாநகர சபை கைகட்டி வேடிக்கை



யாழ்ப்பாணம், செப். 06

பொலிஸ் மா அதிபரின் சகோதரர் என்று பொலிஸாரால் கூறப்பட்ட ஒருவர் தடைகளை மீறி நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையாக - பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்யும் இடத்தில் காரை நிறுத்தியமை பல தரப்பினரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அவரின் இந்த அத்துமீறிய செயலுக்கு அங்கு பணியில் இருந்த பொலிஸாரும், மாநகர சபை

11



வரலாற்று சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் தெப்பத் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது சுவாமி திருவீதி உலா வரும் காட்சி...!

## கொக்குத்தொடுவாய் புதைகுழி; அகழ்வு பணிகள் இன்று நடக்கும்

### சீரற்ற வானிலையால் நேற்று நடக்கவில்லை

முல்லைத்தீவு, செப். 06

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணிகள் இன்று புதன்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மனிதப் புதைகுழி அகழ்வுக்காக நேற்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த. பிரதீபன் தொல்பொருள் திணைக்கள பிரதிநிதி, முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி க. வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அதிகாரி

11

## பிள்ளையான், ராஜபக்ஷர்களை உடனடியாக கைது செய்யுங்கள்!

### கஜேந்திரன் எம். பி. கோரிக்கை

கொழும்பு, செப். 06

ராஜபக்ஷர்கள், பிள்ளையான் போன்றவர்கள் உடன் கைது செய்யப்பட வேண்டும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், இவர்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

11

## நான் சாகும் முன் மகனை பார்ப்பதற்கு உதவுங்கள்!

### காணாமல் ஆக்கப்பட்டவரின் தந்தை



யாழ்ப்பாணம், செப். 06

இலங்கை இராணுவம் பிடித்து சென்ற எனது மகன் சிறைச்சாலைக்குள் இருப்பதற்கான ஆதாரங்கள் ஊடகங்கள் மூலம் இரண்டு தடவைகள் வெளிவந்துள்ளன. எனினும், 17 ஆண்டுகள் கடந்தும் இது வரையும் எனது மகனை பார்க்க முடியவில்லை. நான் இறக்கும் முன் எனது மகனை காண

11

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி தேர்தலில் தான் நிச்சயம் போட்டியிடுவேன் என்று ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்திருக்கிறார்.

அவர் இதற்கு முன்னரும் ஒரு தடவை போட்டியிடுவதற்காக வேட்புமனுவையும் தாக்கல் செய்துவிட்டு பின்னர் வாபஸ் வாங்கியவர்தான். நான் இரண்டாயிரத்து பத்தொன்பதில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் கோட்டாபய வுடன் போட்டியிட்டதை சொல்லவில்லை.

கோட்டாபய பதவியிலிருந்து வெளியேறி - தப்பியோடிய பின்னர், பாராளுமன்றத்தின் ஊடாக அடுத்த ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக நடைபெற்ற தேர்தலில் இருந்து கடைசி நேரத்தில் சஜித் விலகியமை பற்றி சொல்கிறேன்.

இப்போது அவர் திட்டவட்டமாக தான் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதைப் பற்றி அறிவித்திருக்கிறார். அதனைத்தான் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் விரும்புகிறார் என்று தற்போது தெரியவருகின்றது. அவர் பொதுஜனபெரமுனவின் ஆதரவுடனோ அல்லது அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து தனி அணியாக பரிணமிக்க விருக்கும் நிமல் லான்சா திரட்டிவரும் அணியின் ஆதரவுடனோதான் போட்டியிடப் போகின்றார் என்பது தெரிந்ததுதான்.

அவ்வாறு அவர் போட்டியிடுகின்றபோது, அவரை எதிர்த்து ஒரு பலமான வேட்பாளர் பொது வேட்பாளராகக் களம் இறங்குவதற்கான முயற்சிகள் கொழும்பில் சில நாட்களாக நடந்துகொண்டிருப்பது பற்றி ஏற்கனவே, இந்தப் பத்தியில் பல தடவைகள் குறிப்பிட்டிருந்தேன். அதற்கான முயற்சியில் சம்பிக்க ரணவக்க, தம்மிக பெரேரா, திலீத் ஜெயவீர ஆகியோர் ஈடுபட்டிருப்பது பற்றியும் முன்னர் பார்த்திருந்தோம்.

ஆனால், இந்த நகர்வுகளை அறிந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்படியொரு பொது வேட்பாளர் வந்துவிடாமல் இருப்பதற்கான காய்களை நகர்த்தி வந்ததும் தெரிந்ததுதான்.

அண்மைக்காலமாக பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி நாட்டில் தொடர்ச்சியான சம்பவங்கள் நடந்து வந்தன. அந்த சம்பவங்களை ஊதிப்பெருக்கி, கொதிநிலையில் வைத்திருப்பதில் தெற்கின் பிரபல ஊடகங்கள் இரண்டு தொடர்ச்சியாக முயன்று வருகின்றன.

அந்த ஊடகங்களின் துணையுடன் ஒரு வேட்பாளரை களம் இறக்கி தனக்கு கிடைக்க முடியாதவை என்று ரணில் தெரிந்து வைத்திருக்கின்ற கடும் பௌத்த இன வாதிகளின் வாக்குகளை ஒருவர் அப்படியே அபகரிக்கவும் -

அதாவது, அந்த வாக்குகள் வெற்றிபெறக்கூடிய தனது எதிர்வேட்பாளருக்கு போய்விடாமல் செய்வதில் ரணில் கவனம்செலுத்தி வந்தார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. இதேபோல, இன்று கணிசமான ஆதரவு தளத்தை கொண்டிருக்கும் ஜே. வி. பியின் வாக்குகள்- அது தனித்து வெற்றிபெறுவதற்கு போதுமானவை அல்ல என்பதும், தன்னிலும் பார்க்க அவர்கள் குறைவாகவே எடுப்பார்கள் என்பதும் ரணிலுக்கு தெரிந்ததுதான்.

அதனால்தான் 'அவர்கள் எதிரணியுடன் சேர்ந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் அது தனக்கு பாதகமாகிவிடும் என்பதால் ஜே. வி. பியை எதிரணியுடன் சேர்ந்து விடாமல் பார்ப்பதிலும் ரணில் அக்கறை கொண்டிருந்தார்.

அவரின் விருப்பம் போலவே ஜே. வி. பியும் தனது வேட்பாளராக அநுர குமார திஸநாயக்காவை அறிவித்து விட்டது.

சுதந்திர கட்சியின் நிலைப்பாடு தெரிந்ததுதான். அந்தக் கட்சியின் முக்கிய தலைவர்களான நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, துமிந்த திஸநாயக்க ஆகியோர் ஏற்கனவே ரணில் ஆதரவு நிலைப்பாட்டில் இருக்க, மைத்திரியும் கட்சி செயலாளர் தயாசிறியும் தனி ஆவர்த்தனம் செய்துகொண்டிருந்தனர். ஆனால், கடந்த ஞாயிறன்று நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் கலந்து கொண்ட நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர ஆகியோர் கட்சியின் கட்டுப்பாட்டை தமதாக்கியது போன்ற ஒரு நிலைமை காணப்பட்டதுடன், ரணிலின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என்றும் அதுவே நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல உதவும் என்றும் தெரிவித்திருந்தனர்.

பல அணிகள் தேர்தலில் களம் இறங்கினால்தானே அதிக வாக்குகளை பெற்று முன்னணியில் இருப்பேன் என்பதை கணித்து வைத்துள்ள ரணில், அதை நோக்கியே நகர்ந்து கொண்டிருப்பதையே சஜித்தின் இந்த அறிவிப்பும் வெளிப்படுத்தியிருக்கின்றது.

கடைசியாக எடுக்கப்பட்ட சுதந்திரமான கருத்துக் கணிப்பு ஒன்றில், நாட்டு மக்கள் விரும்பும் அடுத்த தலைவருக்கான தெரிவில் ரணிலே முதலிடத்தில் இருப்பதும் அவருக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியதுதான். அதற்காக அவர் ஐம்பது வீதத்துக்கும் அதிகமான மக்களின் தெரிவாக இல்லாவிட்டாலும் அவரே முதலாம் ஆளாக இருக்கிறாராம்.

- ஊர்க்குருவி.

# செல்வம், சார்ள்ஸ், சிவாஜிக்கு யாழ். நீதிமன்றம் பிடியாணை!

யாழ்ப்பாணம், செப். 06

பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினமான கடந்த பெப்ரவரி 4ஆம் நாளை கரிநாள் என்று அறிவித்து போராட்டம் இடம்பெற்றது.

செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாண பொலிஸாரால் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழக்கு நீதிமன்றில் அழைக்கப்பட்ட போது, மன்றில் சமுகமளிக்காத செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு மன்று பிடியாணை பிறப்பித்துள்ளது. (ஐ)

# 2048 அபிவிருத்தி இலக்கை அடைய 2024 வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடு!

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, செப். 06

அரசாங்கத்தின் 2048ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு பங்களிக்கக்கூடிய திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தும் வரை தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அவர்களின் பங்களிப்புகளுக்கு ஏற்ப தற்போது நடைபெற்று வரும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதிக்குள் மத்திய அமைச்சுக்களால் அமுல்படுத்தப்பட்ட 202 பாரிய அபிவிருத்தித் திட்டங்களினால் எட்டப்பட்ட முன்னேற்றம் தொடர்பான அறிக்கையொன்று நிதியமைச்சர், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் என்ற வகையில் ஜனாதிபதியினால் இது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

"கடன் மறுசீரமைப்பு செயல்முறை முடிவடையும் வரை தொடர்புடைய வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்த இயலாமை மற்றும் உள்ளூர் நிதிகளின் மட்டுப்படுத்தப்பட்ட வெளியீடு காரணமாக 2023 இன் இரண்டாம் காலாண்டின் முடிவில் பல திட்டங்களின் முன்னேற்றம் எதிர்பார்த்ததை விட குறைவாக இருந்தது தெரியவந்தது" என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சாதாரண, உயர்தர மாணவர்களுக்கு தொழில் கல்வி பாடம் அறிமுகமாகிறது

கொழும்பு, செப். 06

கல்விப் பொது தர சாதாரண தரம் மற்றும் உயர்தர மாணவர்களுக்கான தொழிற்கல்வி தொடர்பான ஐந்து அடிப்படை பகுதிகளை உள்ளடக்கிய பாடத்திட்டத்தை நிறைவு செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன, சாதாரண தர பரீட்சைகளை முடிக்கும் மாணவர்களுக்கு உயர்தரம் ஆரம்பிக்கும் வரை அல்லது உயர்தர பரீட்சையை



முடிக்கும் மாணவர்களுக்கு வழங்குவதற்கு இந்த வேலைத்திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தத் திட்டம் முக்கியமாக மென்திறன்களுடன் தொழிற்கல்விக்கு பொதுவாக முக்கியமான தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில திறன்களை வளர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

முன்னோடி திட்டமாக முன்மொழியப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, நாட்டின் ஒவ்வொரு கல்விப் பிரிவையும் உள்ளடக்கி 320 தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 3-4 மாதங்களுக்கு முன்னோடி திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். முன்னோடி திட்டத்தின் முடிவுகளின் அடிப்படையில் இத்திட்டத்தை 2024ஆம் ஆண்டு தேசிய வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கண் வில்லைகளுக்கு தட்டுப்பாடு கிடையாது

கொழும்பு, செப். 06

நாட்டில் கண் வில்லைகளுக்கு தட்டுப்பாடு இல்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்து பொருட்கள் விநியோக பிரிவின் களஞ்சியசாலைகளில் மாத்திரமே கண்வில்லைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் விஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மருத்துவமனை கட்டமைப்புக்குள் கண் வில்லை சத்திர சிகிச்சைகள் வழமை போன்றே மேற் கொள்ளப்படுவதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத் தின் பொது முகாமையாளர் தினுஷ தசநாயக்க தெரிவித் துள்ளார்.

இதனிடையே, நாட்டில் 160 வகையான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த மருந்துகளை அவசர கொள்வனவு நடைமுறையின் கீழ் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)


## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் 3 அட்டாச் பாத்ரூமுடன் 3 Room A/C வசதியுடன் சொகுசு வீடு வாடகைக்கு உண்டு, (யாழ். போதனா வைத்திய சாலை, யா/வேம்படி மகளிர் கல்லூரி, பஸ் தரிப்பிடம் அனைத்துக்கும் நடந்து செல்லலாம்.)

077 674 0469

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
06.09.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# சனல் - 4 சர்ச்சைகள்

சனல் - 4, ஈஸ்டர் குண்டு தாக்குதல்கள் தொடர்பான காணொலி ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. தென்னிலங்கை மைய சிங்கள - பௌத்த தேசியவாத தரப்புகள் மீண்டும் எழுச்சி கொள்வதற்காக - தங்களை தயார்படுத்துவதான தோற்றம் தெரிகின்ற சூழலில்தான் இவ்வாறானதொரு காணொலி வெளியாகியிருக்கின்றது. இதன் உண்மைதன்மை என்ன என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு - உண்மைகள் ஆதாரபூர்வமாக வெளிக் கொண்டுவரப்படுமா? இலங்கை தீவைப் பொறுத்தவரையில் அவ்வாறான விசாரணைகள் இடம்பெறுவதற்கான சாத்தியத்தை சந்தேகத்துடன்தான் நோக்க வேண்டும். ஆனால், இந்தக் காணொலி சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் - குறிப்பாக, கத்தோலிக்க மக்கள் மத்தியில் நிச்சயம் அதிர்வலைகளை ஏற்படுத்தக் கூடியது. ஏனெனில், அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக ராஜபக்ஷ குடும்பம் இவ்வாறானதொரு நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதான கருத்துகள் ஏற்கனவே, வீழ்ச்சியுற்றிருக்கும் ராஜபக்ஷக்களை மேலும் பாதிக்கும்.

ஒரு வகையில் சனல் - 4 காணொலியின் பிரதான இலக்கு இதுவாகவும் இருக்கக்கூடும். ராஜபக்ஷக்கள் மீதான அமெரிக்க மற்றும் கனடிய தடைகள் அவர்களை பெரியளவில் வீழ்ச்சியுற செய்யவில்லை - மாறாக வலுப்படுத்துவதற்கே பயன்பட்டது. இவ்வாறானதொரு சூழலில்தான் சனல் - 4 காணொலி வெளியாகியிருக்கின்றது. சனல் - 4 இறுதி யுத்தத்தின்போதான மனித உரிமைகள் மீறல், யுத்தக் குற்றங்கள் தொடர்பான காணொலியை வெளியிட்டிருந்தது.

இலங்கை மீதான மனித உரிமைகள் சார்ந்த அழுத்தங்களுக்கு அது ஓர் உசாத்துணையானது. ஆனால், அவ்வாறான அழுத்தங்களால் இலங்கை தீவில் மாற்றங்களை ஏற்படுத்த முடிந்ததா என்றால் - பதில் - இல்லை. இவ்வாறானதொரு சூழலில், தற்போது வெளியாகியிருக்கும் ஈஸ்டர் தாக்குதல் காணொலியானது அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான ஒரு சூழ்ச்சியாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக வாதிடுகின்றது. இதனை சாதாரண சிங்கள் மக்கள் நம்பினால் ராஜபக்ஷக்கள் மக்கள் மத்தியிலிருந்து மேலும் அந்நியப்படுவர். அவர்களின் அதிகாரத்தை கைப்பற்றும் கனவு கேள்விக்கு உள்ளாகும்.

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுவதற்கான நகர்வுகள் இடம்பெற்றுவரும் சூழலில் இவ்வாறானதொரு காணொலி வெளியாகியிருக்கின்றது. எனவே, இது ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகளில் செல்வாக்கு செலுத்தும். ஏனெனில், தற்போதைய சூழலில் ரணில் மொட்டு முகாமுடன்தான் இருக்கின்றார். அந்த முகாமின் இயக்குநர்கள் மீதே தற்போது பெரும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் மொட்டு முகாமில் உள்ளவர்கள் தொடர்ந்தும் ராஜபக்ஷவுடன் இருப்பதில் சிக்கல்கள் ஏற்படும். உடைவுகள் தீவிரமடையும். தகவல்களின் உண்மை - பொய் என்பதற்கு அப்பால் மனித மனங்களை காயப்படுத்தக்கூடிய விடயம் என்பதால், ராஜபக்ஷக்களோடு இணைந்திருந்தால் மக்களை எதிர்கொள்ள முடியாதென்னும் நிலைமை உருவாகும்போது மொட்டு முகாம் சிதைவடையும். ஏற்கனவே, அது சிதைவடைந்துதான் இருக்கின்றது. இலங்கையின் அரசியல் மேலும் குழப்பமடையலாம். இதனை ரணில் அறுவடை செய்வாரா அல்லது - வேறு எவராவது அறுவடை செய்வரா?

காணொலி - ஓர் இஸ்லாமிய நபர், பிறிதோர் இஸ்லாமிய நபர் மீது முன்வைக்கும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றது. தற்கொலை தாக்குதலில் ஈடுபட்டவர்கள் அனைவருமே இஸ்லாமியர்கள். இந்த இடம் சற்று பலவீனமாகவும் இருக்கின்றது.

# வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகள் 49 குடும்பங்களுக்கு நேற்று பகிர்ந்தளிப்பு



*யாழ்ப்பாணம், செப். 06*

வலி. வடக்கு அன்ரனிபுரத்தில் அண்மையில் விடுவிக்கப் பட்ட அரச காணிகள் பொது மக்களுக்கு நேற்று பகிர்ந்தளிக்கப்பட்டன.

குறிப்பாக நீண்ட காலமாக அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்ற வலி. வடக்கை பூர்வீ கமாக கொண்ட சுமார் 49 குடும்பங்களுக்கு தலா ஒன்றரை பரப்பு வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

குறித்த பிரதேசம் உயர் பாது காப்பு பிரதேசமாக இருந்து வந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற் சியினால் கடந்த பெப்ரவரி மாதமளவில் விடுவிக்கப்பட்டிருத்ததுடன், விடுவிக்கப்பட்ட அரச காணிகளை முகாம்களில் வாழும் மக்களுக்கு பகிர்ந்தளிப் பதற்கான நடவடிக்கைகளும் அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டிருந்ததாக அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குலுக்கல் முறையில் காணிகளை தெரிவு செய்து பயனாளர்களுக்கு வழங்கிய நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச செயலாளர் சிவஸ்ரீ, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் செல்வி. சாந்தாதேவி, ஈழ மக்கள் ஜனநா யகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் (தோழர் ஜீவன்) மற்றும் கட்சியின் பிரதேச அமைப்பாளர்கள், அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# வடக்குக்கான ரயில் மார்க்கம் ஜனவரியில் மீண்டும் முடங்கும்

*கொழும்பு, செப். 06*

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 06 மாதங்களுக்கு வடக்கு ரயில் மார்க்கத்தை நவீனமயப்படுத்த திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதற்கமைய, கொழும்பிலிருந்து காங்கேசன்துறை வரை மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீற்றார் வேகத்தில் ரயில்களை இயக்க முடியும் என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு முதல் பாணந்துறை வரையிலான ரயில் மார்க்கத்தை நவீனமயப் படுத்தும் நடவடிக் கைகள் எதிர்வரும் சில நாட்களுக்குள் ஆரம்பிக்கப்படுமென அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் கூறினார்.

மேலும், களனி மிட்டியாவத்தை ரயில் பாதையின் வேகக் கட்டுப்பாட்டை நீக்கி, வேகத்தை அதிகரிப்பதற்கான புனரமைப்புப் பணிகளையும் இம்மாத முற்பகுதியில் மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(அ)

# தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு அல்ட்ரா சவுண்ட் உபகரணம் அன்பளிப்பு

*யாழ்ப்பாணம், செப். 06*

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு ‘அல்ட்ரா சவுண்ட்’ உபகரணம் நன்கொடை அளிக்கப்பட்டது.

பிரான்ஸில் இயங்கும் இலங்கை - இந்திய வர்த்தக சங்கத்தினால் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான அல்ட்ராசவுண்ட் உபகரணமே நேற்று மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

உபகரணத்தை கையளிக்கும் நிகழ்வில் இலங்கை இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவர் மருத்துவமனை அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**செப்ரெம்பர் - 06 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆவணி 20**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : சப்தமி**

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். வியாபாரத்தில் பிரச்னைகள் வரும். சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். மறைமுக பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். பாராட்டப்படுவீர்கள்.

**கடகம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**துலாம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**விருட்சிகம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். முன்னுரிமை தருவார்கள். அமோகமான நாள்.

**தனுசு**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய சலுகைகள் கிடைக்கும்.

**மகரம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சகஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில வெற்றி காண்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**மீனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

# கூலிப்படை வன்முறை கலாசாரம் தமிழகத்தில் தலைதூக்கியுள்ளது

## பா. ஜ. க. தமிழக தலைவர்

திருநெல்வேலி, செப். 06

கடந்த ஒரு மாதத்தில் தென் தமிழகத்தில் 21 வன்முறை கொலைகள் நடந்துள்ளன என்று குற்றம்சாட்டியுள்ள பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தமிழகத்தில் கூலிப்படையின் வன்முறை கலாசாரம் தலைதூக்கியுள்ளதாக தெரிவித்தார்.

பா. ஜ. க. பிரமுகர் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜெகன் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியான தி. மு. கவை சேர்ந்தவரின் கணவரை கைது செய்யாமல் உடலை வாங்க மாட்டோம் என்று போராடினோம். 5 நாள் போராட்டத்துக்குப்பின் தி. மு. க. பிரமுகர் சரணடைந்துள்ளார். அப்பகுதியில் பா. ஜ. கவை வளர்த்தார் என்ற ஒரே காரணத்துக்காக கூலிப்படையை வைத்து ஜெகனை கொலை செய்தனர். சரணடைந்த தி. மு. க. பிரமுகர் மீது ஏற்கெனவே 16 கொலை வழக்குகள் உட்பட மொத்தம் 96 வழக்குகள் இருப்பதாக சொல்கிறார்கள். இந்தளவுக்கு தைரியம் அவருக்கு எங்கே இருந்து வந்தது?

கொலை செய்யப்பட்ட ஜெகனின் தாய்க்கு வீடு கட்டி கொடுப்பதாக உறுதி கொடுத்துள்ளேன். அது பா. ஜ. கவின் கடமை.

கடந்த ஒரு மாதத்தில் தென் தமிழகத்தில் 21 வன்முறை கொலைகள் நடந்துள்ளன. தமிழகத்தில் எந்தளவுக்கு கூலிப்படையின் வன்முறை கலாச்சாரம் தலைதூக்கியுள்ளது என்பதை இது வெளிக்காட்டுகிறது. குடி, கஞ்சா புழக்கம் அதிகமாகிவிட்டது. தென் தமிழகத்தில் வன்முறையை தடுக்க வளர்ச்சியைக் கொண்டு வர வேண்டும். வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் - என்றார்.

(ஐ)

# ‘இந்தியா’ என்ற சொல்லே பா. ஜ. கவை விரட்டியடிக்கும்!

## தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின்

சென்னை, செப். 06

“வரும் தேர்தலில் இந்தியா என்றே சொல்லே பா.ஜ.கவை விரட்டும்” என முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



ஜி 20 மாநாட்டில் பங்கேற்கும் விருந்தினர்களுக்கு பாரத குடியரசு தலைவர் என குறிப்பிட்டு அழைப்பிதழ் அளிக்கப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவர் மாளிகை தரும் விருந்தில் பங்கேற்க அனுப்பிய அழைப்பிதழில் உள்ள வார்த்தைகளால் தற்போது சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

டில்லியில் உள்ள ஜி 20 மாநாடு பிரகதி மைதானத்தில் வரும் 9 மற்றும் 10ஆம் திகதிகளில் நடைபெறுகிறது. இதில், அமெரிக்கா உள்ளிட்ட உலகின் முக்கிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டில் பங்கேற்கும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கு குடியரசு தலைவர் விருந்தளிக்கிறார். அதற்காக அவர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது. அதில் இந்திய குடியரசு தலைவர் என்பதற்கு பதிலாக பாரத் குடியரசு தலைவர் என அச்சிடப்பட்டுள்ளது.

இந்த அழைப்பிதழுக்கு எதிர்கட்சியினரிடையே கடும் கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் இதுகுறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது..

“பாசிச பா. ஜ. க. ஆட்சியை வீழ்த்தும் கூட்டணிக்கு “இந்தியா” என்று பெயர் சூட்டியதில் இருந்து பா. ஜ. கவுக்கு இந்தியா என்ற சொல்லே கசந்துவருகிறது. இந்தியாவை வளர்ச்சிமிகு இந்தியாவாக மாற்றப் போகிறோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர் பிரதமர் நரேந்திர மோடி.

அவரால் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா என்ற பெயரை மட்டும்தான் மாற்ற முடிந்திருக்கிறது. அரண்டவர் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப் போல இந்தியா என்ற சொல்லே பா.ஜ.க.வை மிரட்டுகிறது. தேர்தலில் இந்தியா என்ற சொல்லே பா. ஜ. கவை விரட்டும்!“ என்று கூறியுள்ளார்.

(ஐ)

# உதயநிதியின் தலைக்கு ரூ. 10 கோடி போதாது எனில் கூடுதலாக தருவேன்

## அயோத்தி சாமியார் அறிவிப்பு

அயோத்தி, செப். 05

அமைச்சர் உதயநிதியின் தலைக்கு 10 கோடி (இந்திய) ரூபாய் பத்தாது என்றால் கூடுதலாக தரவும் தயார் என்று அயோத்தி சாமியார் மீண்டும் மிரட்டியுள்ளார்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் சனாதன ஒழிப்பு மாநாடு சென்னையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது. கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக்கூடாது. ஒழித்துக் கட்ட வேண்டும். அப்படித்தான் இந்த சனாதனம். சனாதனம் என்பதை எதிர்ப்பதை விட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டியதே முதல் பணி என தெரிவித்திருந்தார்.

இதற்கு பா. ஜ. க. மற்றும் இந்து அமைப்பகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. அமைச்சர் உதயநிதி மன்னிப்பு கேட்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. அயோத்தியை சேர்ந்த சாமியார் பரமஹம்ச ஆச்சாரியா என்பவர் அமைச்சர் உதயநிதி தலையை கொண்டு வருவோருக்கு ரூ.10 கோடி பரிசு வழங்கப்படும் என அறிவித்திருந்தார்.

இந்நிலையில், மீண்டும் செய்தியாளர்களிடம் பேசிய சாமியார் பரமஹம்ச ஆச்சாரியா, “சனாதனத்தை இழிவுபடுத்தியதை பொறுத்துக்கொள்ள முடியாது, நாட்டில் உள்ள 100 கோடி மக்களின் உணர்வுகளை புண்படுத்தியதற்காக உதயநிதி மன்னிப்பு கேட்க வேண்டும். உதயநிதியின் தலையை யாரும் சீவவில்லை என்றால் நானே சீவுவேன். அதற்காக வாள் ஒன்றையும் தயாரித்துள்ளேன். உதயநிதி தலையை வெட்ட 10 கோடி ரூபாய் போதாது எனில் அந்த தொகையை உயர்த்தவும் தயார்” என்று கூறியுள்ளார்.

(ஐ)

# அரசின் தீர்மானங்களினால் நெருக்கடியில் நாட்டு மக்கள்

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 06

**பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானங்களால் மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதியின் கொள்கைக்கு முரணாக நாங்கள் பொருளாதார கொள்கைகளை முன்வைப்போம். எமது கொள்கைகளை ஏற்பதா அல்லது தற்போதைய நிலையை முன்னெடுத்துச் செல்வதா என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்கவேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுன மீது மக்கள் வைத்த நம்பிக்கை பலவீனமடையக்கூடாது என்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம்.

ராஜபக்ஷர்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு பாரிய போராட்டம் மேற்கொள்ளப்பட்ட பின்னணியில் தான் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினோம்.

வரிச் சலுகை வழங்கியது தவறு என்ற குற்றச்சாட்டு எமது அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

தற்போது வரி விதிப்பு எதி



ராக ஒரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். போராட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்களையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது செயற்படுத்துகிறார்.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானங்களால் மக்கள் நெருக்கடிக்குள்ளாகி யுள்ளார்கள்.

இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதியின் கொள்கைக்கு முரணாக நாங்கள் பொருளாதார கொள்கைகளை முன்வைப்போம்.

எமது கொள்கைகளை ஏற்பதா ?அல்லது தற்போதைய நிலையை முன்னெடுத்துச் செல்வதா என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

திறந்த மற்றும் மூடிய பொருளாதார கொள்கைகளை முழுமையாக அமுல்படுத்தாமல் நடுநிலையான பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்த வேண்டும் என்று நாங்கள் குறிப்பிட்டதை நாட்டு மக்களும், எதிர்க்கட்சியினரும் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளார்கள்-என்றார். (அ)

# நீதிபதியை மாற்றக் கோரிய ரங்காவின் மனு நிராகரிப்பு

கொழும்பு, செப். 06

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகவியலாளருமான ஜே. சிறீ ரங்கா தனது வழக்கை வவுனியா மேல் நீதிமன்றத்தின் மற்றுமொரு நீதிபதி முன்னிலையில் விசாரிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை இருவரடங்கிய நீதிபதிகள் குழாம் நிராகரித்துள்ளது.

தாம் உட்பட ஐந்து பிரதிவாதிகளுக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் தற்போது விசாரிக்கப்பட்டு வரும் வழக்கின் நீதிபதி பாரபட்சம் காட்டுவதாகக் குறிப்பிட்டே சிறீ ரங்கா இந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பக்கச்சார்புடன் செயற்பட்டமைக்கான ஆதாரங்களை மனுதாரரால் முன்வைக்க முடியாத நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் மேன்முறையீட்டு மனுவை நிராகரித்துள்ளது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் காரணமாக தாம் நீண்ட காலமாக சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த மனுதாரர், இந்த உத்தரவை நீக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

2011 ஆம் ஆண்டு வவுனியாவில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் சிறீ ரங்கா மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் திகதி வவுனியா செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அருகில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறீ ரங்கா ஓட்டிச் சென்ற பதிவு செய்யப்படாத வாகனம் விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியின் ஓரத்தில் இருந்த மரத்தின் மீது வாகனம் மோதியதில் பாராளுமன்ற உறுப்பினரின் மெய்ப்பாதுகாவலராக இருந்த பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழந்துள்ளார்.

விபத்தின் பின்னர், வாகனத்தை பொலிஸ் சார்ஜன்ட் ஓட்டியதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாக்குமூலம் அளித்திருந்தார். எவ்வாறாயினும், அந்த வாகனத்தை எம்.பி ஓட்டிச் சென்றது பின்னர் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த பிரதி அதிபர் கைது!

கொழும்பு, செப். 06

காலி பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் பிரதி அதிபர் ஒருவர் தனது பாடசாலையில் கல்வி கற்கும் 12 வயதுடைய மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக காலி பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதி அதிபரான 56 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் தனது வீட்டில் கற்பித்தல் வகுப்புகளை நடத்தி வருகின்றார். பாதிக்கப்பட்ட மாணவி 2 ஆம் திகதி காலை வகுப்பிற்குச் சென்றுள்ளார். மாணவியை அழைத்து வந்த அப்பா, சகோதரி வந்த பின்னர் வீடு திரும்புமாறு அறிவுறுத்தியிருந்தார்.

அதன்படி மதியம் 12.30 மணியளவில் வகுப்பு முடிந்து மற்ற மாணவர்கள் வெளியேற, அவர் மட்டும் தங்கைக்காக காத்திருந்தார். அப்போது, சந்தேக நபர் மாணவியை தனது அறைக்கு அழைத்துச் சென்று தேநீர், பிஸ்கட் கொடுத்து பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.

மாணவி வீட்டுக்குச் சென்று பெற்றோரிடம் கூறியுள்ளார். பின்னர் தாயுடன் வந்து நடந்த சம்பவம் குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர். (அ)

# 200 மின்சார பஸ் கொள்வனவுக்கு முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம்

## அமைச்சர் பந்துல கூறுகிறார்

கொழும்பு, செப். 06

மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக 200 மின்சாரத்தில் இயங்கும் பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

2030ஆம் ஆண்டுக்குள் உலகில் உள்ள அனைத்து பொதுப் போக்குவரத்துகளும் புதைபடிவ எரிபொருட்களின் பாவனையிலிருந்து விடுபடுவது தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் பிரகாரம் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக 200 மின்சார பேருந்துகளை இறக்குமதி செய்ய முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அந்தத் திட்டத்திற்காக, தற்போது முதலீட்டாளர்களிடமிருந்து விருப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த திட்டம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கூட்டு முயற்சியாக செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், முதலீட்டாளர்களுக்கு மின்னேற்ற நிலையங்களை நிறுவவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பின்னர், பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஊடாக, முதலீட்டாளர்கள் முதலீடு செய்த தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்திய பிறகு, பேருந்துகளின் உரிமை அரசாங்கத்துக்கு கிடைக்கும். இதற்காக சீனா, கொரியா உட்பட உலகின் எந்த நாடும் விண்ணப்பிக்கலாம். இது ஒரு முதலீட்டு வாய்ப்பாகும்.

2030ஆம் ஆண்டுக்குள் உலகில் உள்ள அனைத்து பொதுப் போக்குவரத்துகளும் புதைபடிவ எரிபொருட்களின் பாவனையிலிருந்து விடுபடுவது தொடர்பில் சர்வதேச உடன்படிக்கையொன்று உள்ளது. கார்பன் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் சுற்றுச்சூழல் கட்டமைப்பைப் பாதுகாக்க இதில் முதலீடு செய்கிறார்கள். மின்சாரப் பேருந்துகள் சுற்றுச்சூழலுக்கு பெறுமதியைக் கொண்டு வருவதனால், அந்தப் பெறுமதிக்கு உலகின் பல்வேறு அமைப்புகள் அதிக விலை கொடுத்து வருகின்றன.

மேலும், அரச நிறுவனங்களின் வருமானம் குறைவதைத் தடுக்க அனைத்து நிறுவனங்களையும் டிஜிற்றல் மயமாக்க வேண்டும். ரயில் மற்றும் போக்குவரத்து சபை பேருந்துகளில் ரிக்கெட் வழங்கும் முறைக்குப் பதிலாக மின்னணு அட்டை முறையைக் கொண்டுவருவதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# பணத்தை வெளிநாடுகளில் பதுக்கியவர்களுக்கு சிக்கல்

கொழும்பு, செப். 06

மோசடியாக சொத்துக்களை ஈட்டி வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் நபர்களின் பணத்தை மீட்பதற்கான உதவிகளை வழங்க போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

இதன்படி, குறித்த பணத்தை மீட்பதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும் என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தின் தெற்காசிய பிராந்திய பிரதிநிதி மார்கோ டீக்சீராவுக்கும், அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இது தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அவ்வாறு ஈட்டுப்பட்ட பணத்தை வெளிநாடுகளில் வைப்பு செய்தவர்களிடம் இருந்து பணத்தை மீட்பது தொடர்பில் உலக வங்கியின் சார்பில் போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் செயற்படுகிறது.

எதிர்வரும் 15ஆம் திகதி புதிய ஊழல் ஒழிப்புச் சட்டம் அமுலுக்கு வரவுள்ள நிலையில் புதிய இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவும் அவ்வாறானவர்கள் தொடர்பில் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என அமைச்சர் விஜயதாச தெரிவித்தார். (அ)

# பஸ்களில் ரிக்கெட்டுகளுக்கு பதிலாக டிஜிற்றல் அட்டைகள்!

கொழும்பு, செப். 06

கடுகதி பஸ்கள் மற்றும் ரயில்களுக்கான பயணச்சீட்டுகளுக்கு பதிலாக டிஜிற்றல் அட்டை அறிமுகப்படுத்தும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதிக செலவுகள் மற்றும் ஊழியர்களின் பல்வேறு மோசடிகள் மற்றும் ஊழல்கள் காரணமாக அரசாங்கத்திற்கு சொந்தமான பயணிகள் போக்குவரத்து சேவைகள் நட்டத்தை சந்தித்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிக செலவுகளாலும், பல்வேறு மோசடிகளாலும், ஊழல்களாலும் ரயில்வேயும், போக்குவரத்து சபையும் நீண்டகால நட்டத்தை சந்தித்து வருகின்றன. மோசடி மற்றும் ஊழலை ஒழிக்க ரயில்வேயை டிஜிற்றல் மயமாக்க வேண்டும். மேலும் கார்ட் முறையில் பஸ் ரிக்கெட் விற்பனை செய்ய வேண்டும். அதற்காக அமைச்சரவை பத்திரம் கொண்டு வரப்படும்-என்றார். (அ)

# ரணிலுடன் இணைந்து பிரதமராக வாருங்கள்!

## சஜித்துக்கு ஹரின் அழைப்பு

கொழும்பு, செப். 06

"பதவி ஆசையில் அலைந்து திரியும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று வெட்கம் இல்லாமல் பகிரங்கமாகக் கூறியுள்ளார். இந்தப் பதவி ஆசையை மறந்துவிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்துச் செயற்படுமாறு அவருக்கு நான் இறுதி அழைப்பு விடுவதுடன் இறுதி எச்சரிக் கையையும் விடுக்கின்றேன்."

- இவ்வாறு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

"சுயநல அரசியல்வாதியான சஜித் பிரேமதாஸ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் நிச்சயம் மீண்டும் படுதோல்வியைச் சந்திப்பார். அத்துடன் அவரின் அரசியலும் முடிவுக்கு வரும்" - என்றும் அமைச்சர் ஹரின் சுட்டிக்காட்டினார்.

"சஜித்துக்குப் பதவி ஆசை தீர வேண்டுமெனில் ரணிலுடன் இணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்க முடியும்" - என்றும் ஹரின் அறிவுரை கூறினார்.

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி வரலாற்று வெற்றியாகப் பதிவு செய்யப்படும்" - என்றும் அவர் அடித்துக் கூறினார். (அ)

# வரி விதிப்புக்கு எதிராக விரைவில் வேலைநிறுத்தம்

## தொழில் வல்லுநர்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப். 06

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால், கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை தொழில் வல்லுநர்கள் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டிற்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முதல் மதிப்பாய்வை நடத்துவதற்காக,

எதிர்வரும் 15 ஆம் திகதி நாணய நிதியப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாகவே அரசாங்கத்திற்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் வழங்கிய எழுத்துமூல உறுதிமொழிக்கு அமைய ஜனாதிபதி செயற்பட வேண்டும் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் பேச்சாளரான சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்தே இளங்க சிங்க தெரிவிக்கையில்-

2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரிவிதிப்பு முறைமையில் திருத்தம் செய்யப்படும் என ஜனாதிபதி விக்கிரமசிங்க உறுதியளித்திருந்த போதிலும் அது நடைபெறவில்லை. வரிப் பிரச்னைக்கு அரசாங்கம் தீர்வை வழங்கத் தவறும் பட்சத்தில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட நேரிடும்-என்றார். (அ)

# முல்லைத்தீவில் மதுபானசாலையை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை!

## அப்பகுதி மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, செப். 06

முல்லைத்தீவில் அமைக்கப்பட்ட மதுபானசாலையை அகற்ற கோரி பிரதேச செயலாளர் ஊடாக கலால் வரி திணைக்களத்துக்கு அறிவித்தல் வழங்கப்பட்டும் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என குறித்த பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் உண்ணாப்பிலவு பகுதியில் புதிதாக மதுபானச்சாலை ஒன்று கடந்த ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது.

இதனை அகற்றக் கோரி குறித்த கிராம மக்கள், பொது அமைப்புக்கள், பாடசாலை இணைந்து எதிர்ப்பு தெரிவித்து பிரதேச செயலாளருக்கும் பின்னர் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் கடிதம் வழங்கியுள்ளனர்.

அதனையடுத்து அரசாங்க அதிபராலும், பிரதேச செயலாளராலும் மக்களால் வழங்கப்பட்ட எதிர்ப்பு கடிதங்கள் இணைக்கப்பட்ட கடிதம் இலங்கை மதுவரி திணைக்களத்தினருக்கு அனுப்பப்பட்டும் இது வரையில் குறித்த மதுபானச்சாலையை அகற்ற எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என குறித்த கிராம மக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரதிநிதிகள் என பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அஜித் ரோஹணவின் மனுவை நிராகரித்தது உயர் நீதிமன்றம்

கொழும்பு, செப். 06

தென் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றிய அஜித் ரோஹணவை கிழக்கு மாகாணத்திற்கு இடமாற்றம் செய்த தீர்மானத்தை ரத்து செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை நிராகரிக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேற்படி மனுவுக்கு எதிராக சட்டமா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் முன்வைக்கப்பட்ட ஆரம்ப ஆட்சேபனைகளை ஏற்று, இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனுதாரரை தென் மாகாணத்திலிருந்து இடமாற்றம் செய்ய எடுக்கப்பட்ட தீர்மானம் நியாயமற்றது என மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

மனுதாரரை கிழக்கு மாகாணத்திற்கு இடமாற்றம் செய்யுமாறு பொலிஸ் மா அதிபரினால் வெளியிடப்பட்ட கடிதத்தை செல்லுபடியற்ற வகையில் உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றில் கோரியுள்ளார்.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கங்கா வாகிஷ்ட ஆராச்சி, மனுதாரர் அஜித் ரோஹணவின் இடமாற்றம் சட்ட ரீதியாகவே மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டார்.

அவருடன் மேலும் ஆறு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல், அவர்களில் எவரும் இடமாற்றத்தை சவால் செய்யவில்லை என்று கூறினார்.

உயர்நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு, உண்மைகளை பரிசீலித்து மனுவை விசாரிக்காமல் தள்ளுபடி செய்ய முடிவு செய்தது. (அ)

# வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதில் ஜப்பானின் பங்களிப்பு பாராட்டுக்குரியது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 06

இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான சர்வதேச முயற்சிகளில் ஜப்பானின் தலைமைத்துவம் பாராட்டுக்குரியது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜப்பானின் என்.எச்.கே உடனான நேர்காணலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

"இலங்கையின் கடன் நெருக்கடியைத் தீர்க்கும் நோக்கில் ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்ட புதிய சர்வதேச கட்டமைப்பின் இணைத் தலைவராக ஜப்பான் பணியாற்றுவது வசதியாக உள்ளது.

எமக்கு ஜப்பான் அரசாங்கம் நிறைய செய்துக் கொண்டிருக்கிறது. கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாங்கள் ஜப்பானுடன் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம்.

சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் பகுதியை நனவாக்கும் முயற்சியில் இலங்கையை ஒரு முக்கிய பங்காளியாக ஜப்பான் கருதுகிறது. மேலும் தெற்காசிய நாடுகளுக்கு கடன் உதவியையும் வழங்கி வருகிறது.

அதேபோன்று பெல்ட் அண்ட் ரோட் என்ற பெயரில் தொடங்கப்பட்டு தற்போது உலகளாவிய அபிவிருத்தி முன்முயற்சி என பெயரிடப்பட்டுள்ள திட்டத்தில் சீனா, இலங்கையை ஒரு பங்காளியாக கருதுகின்றது.

சீனாவிற்கான கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதையடுத்து, 2017 ஆம் ஆண்டில், நாட்டின் தெற்கில் உள்ள ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்வாகத்தை சீன நிறுவனத்திடம் 99 ஆண்டு குத்தகைக்கு ஒப்படைக்க நேரிட்டது.



துரதிஷ்டவசமாக கடன் பிரச்னைகளை கையாளுவதற்கு சீனாவிடம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) போன்ற முகவர் நிலையங்கள் இல்லாததன் காரணமாக இவ்வாறு வழங்க வேண்டி ஏற்பட்டது.

எவ்வாறாயினும் சீன நிறுவனத்தினால் நடத்தப்படும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பை இலங்கை அரசாங்கமே கட்டுப்படுத்துகிறது. அத்துடன் ஜப்பானின் கடல்சார் தற்காப்புப் படை கப்பல்களும் இலங்கை துறைமுகத்திற்கான அழைப்பை விடுத்துள்ளன"- என்றார். (அ)

# பாடசாலை மாணவர்கள் உட்பட 22 தொழுநோயாளர்கள் பதிவு!

கொழும்பு, செப். 06

பொலநறுவை மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் ஐந்து பாடசாலை மாணவர்கள் உட்பட 22 பேர் தொழுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, கடந்த வருடம் கண்டறியப்பட்ட மூன்று தொழுநோயாளர்கள் அடங்கலாக 25 பேர் தற்போது சிகிச்சை பெற்று வருவதாக மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தமன்கடுவ, அரலகங்வில ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தலா 5 பேரும், மெதிரிகிரிய, லங்காபுர, சிரிபுர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தலா 3 பேரும், வெலிகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 4 பேரும், ஹிங்குராங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 15 வயதுக்குட்பட்ட 5 பேர் அடங்குவதுடன், நீண்டகாலமாக நோயினால் பாதிக்கப்பட்டு அங்கவீனமான நிலையில் ஐவர் அடங்குவதாக மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்பட்டவர்களில் தொற்றுவகை அறிகுறிகளைக் கொண்ட 19 பேரும் தோற்று அல்லாத வகை நோய் அறிகுறிகளைக் கொண்ட 6 பேரும் தனித்தனியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்படி, தொழுநோயாளர்கள் பொலநறுவை, மெதிரிகிரிய மற்றும் ஹிங்குராங்கொட வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தோலில் வெளிர் நிற புள்ளிகள் மற்றும் குறித்த இடத்தில் உணர்வின்மை போன்ற அறிகுறிகள் தென்படுமாயின் சுயமாக நோயைக் கண்டறிவதற்கான வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார துறையினர் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறு தோலில் வெளிர் நிற புள்ளிகள் காணப்படுமாயின் அவற்றை புகைப்படம் எடுத்து 075 4088604 அல்லது 075 4434085 என்னும் வட்ஸ் அப் இலக்கங்களுக்கு அனுப்புவதன் மூலம் நோய் குறித்த விடயங்களை அறிந்துகொள்ள முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# சஜித்தை கொலை செய்வதற்கு எவரும் முயற்சிக்கமாட்டார்கள்!

## கூறுகிறார் பாலித ரங்கே பண்டார

**கொழும்பு, செப். 06**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை கொலை செய்ய எவரும் முயற்சிக்கமாட்டார்கள் என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.**



தனக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்திருந்தமைக்கு பதிலளிக்கும் வகையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ரங்கே பண்டார இதனை குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரை கொலை செய்ய எவரும் முயற்சிக்கவில்லை. நாங்கள் மாட்டிறைச்சியை சாப்பிடுவதில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் என்னிடம் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட போவதாக சஜித் பிரேமதாஸ பகிரங்கமாக பொய் கூறுகிறார்.

அதேபோல் சஜித் பிரேமதாஸ கடந்த காலங்களில் நடந்துகொண்ட விதத்தை நாங்கள் அனுபவத்தில் கண்டுள்ளோம்.

ஒரு முறை கரு ஜயசூரியவை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் பதவிக்கு பரிந்துரைத்தார். அதன் பின்னர் டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதிக்கான போட்டியில் நிறுத்தினார்-என்றார். (அ)

# மின்சாரசபையில் பணியாற்றும் 24,000 ஊழியர்களுக்குச் சிக்கல்!



*கொழும்பு, செப். 06*

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பான சட்டமூலம் அடுத்த மாதம் சபையில் சமர்ப்பிக்கப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியின் பின்னர் குறித்த சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மின்சார சபையில் பணியாற்றும் 24000 ஊழியர்களின் வினைத்திறன் தொடர்பில் பிரச்னைகள் காணப்படுவதாகவும், தேவையான இடங்களில் ஊழியர்களை குறைக்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சில சேவைகள் வெளியில் இருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படுவதால் சபைக்கு பெரும் சுமை ஏற்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொலன்னறுவை மாவட்ட சபை உறுப்பினர் கின்ஸ் நெல்சன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# வசாவிளானில் வீடொன்று மின்கசிவால் எரிந்து நாசம்



*யாழ்ப்பாணம், செப். 06*

தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வசாவிளான் சுதந்திரபுரம் பகுதியில் வீடொன்று மின் கசிவினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் இருந்த இளம் குடும்பப் பெண்ணுக்கு கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் ஆண் குழந்தை ஒன்று கிடைத்துள்ளது.

இதனால் அயல் வீட்டில் இருந்து வயர் ஊடாக மின்சார இணைப்பினை பெற்றுள்ளனர்.

வீட்டில் யாரும் இல்லாத நேரம் நேற்று முன் தினம் திடீர் மின்கசிவு ஏற்பட்டுள்ளது.

அயலவர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்த பொழுதும் வீடு முற்றாக எரிந்து நாசமாகி உள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மின் கசிவு தொடர்பான தடயவியல் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

# வறட்சியால் நாடு முழுவதும் 62,375 விவசாயிகள் பாதிப்பு

*கொழும்பு, செப். 06*

நாடு முழுவதும் அண்மைய தினங்களாக காணப்பட்ட வறட்சி காரணமாக 62,375 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

வறட்சி காரணமாக 60,930 ஏக்கர் நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, குருநாகல் மாவட்டத்தில் 26,654. 40 ஹெக்டேயர் பயிர் சேதம் பதிவாகியுள்ளதுடன், இது அதிகளவான பயிர் சேதம் ஏற்பட்ட மாவட்டமாக கருதப்படுகிறது.

அங்கு பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 32,144 ஆக பதிவாகியுள்ளது.

இரண்டாவது அதிகூடிய நெற் பயிர் சேதங்கள் உடவலவ பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இது 14,810. 13 ஹெக்ரேயர் என்ற நிலையில், பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை 11,651 ஆக பதிவாகியுள்ளது.

இந்த ஆண்டு மொத்தம் 5 இலட்சத்து 3000 ஹெக்ரேயரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய பயிர் சேத அறிக்கைகளின் அடிப்படையில், வறட்சியால் குறைந்தது 70,000 ஹெக்ரேயர் சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர உடவளவ நீர்த்தேக்கத்தின் கீழ் விளையும் நெற்பயிர்கள் நாட்டுக்கு அதிகூடிய விளைச்சலை வழங்கும் நெற்பயிர்கள் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால் மகாவலி மற்றும் ஏனைய பிரதான நீர்த்தேக்கங்களின் கீழ் பயிரிடப்பட்ட நெல் வயல்களில் அதிக விளைச்சல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பயிர் இழப்புகள் நாட்டின் அரிசி தேவைக்கு பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் அடுத்த பருவ நெல் அறுவடை வரை தேவையான அரிசி மற்றும் நெல் இருப்புக்கள் நாட்டில் காணப்படுவதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியில் பெறப்பட்ட தண்டவாளங்கள் கையளிப்பு

*கொழும்பு, செப். 06*

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 2 பில்லியன் ரூபாவுக்கு அதிகம் பெறுமதியான தண்டவாளங்கள் ரயில்வே திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

நான்கு வருடங்களின் பின்னர் குறித்த கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, சீனாவில் இருந்து இரண்டு வகையான 10,000 ரயில் தண்டவாளங்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே, கரையோர மார்க்கம் புனரமைக்கப்படாமையினால் இயில்களின் வேகம் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். (அ)

# மான்களை வேட்டையாடிய குற்றச்சாட்டில் மூவர் கைது

*கொழும்பு, செப். 06*

புத்தளம் பெட்டிகம பகுதியில் மான்களை வேட்டையாடிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மகாவெவ, வென்னப்புவ பகுதிகளிலுள்ள பல ஹோட்டல்களுக்கு அதிக விலைகளில் மான் இறைச்சியை விற்பனை செய்யும் நோக்கில் அவை வேட்டையாடப்படுவதாக வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களினால் ஆனமடுவ வனப்பகுதியில் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மான்களை வேட்டையாட வந்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 3 சந்தேகநபர்களும் மஹகும்புக்கடவல, ரத்மல்கஹவெவ, தொடுவாய் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களிடமிருந்து கப் வாகனம் மற்றும் வேட்டைக்கு பயன்படுத்தப்படும் துப்பாக்கிகள் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நாடு ஜனாதிபதிக்கு கடமைப்பட்டுள்ளது

*கொழும்பு, செப். 06*

நாடு என்ற வகையில் அனைவரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடமைப்பட்டுள்ளதாக ஆளும் கட்சியின் அமைப்பாளரும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களால் தூக்கி எறியப்பட்ட ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக பதவிக்கு வருவார் என எவரும் எதிர்பார்க்கவில்லை.

நாடு பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருந்த நிலைமையில், ரணில் விக்ரமசிங்க புதிய எதிர்பார்ப்பை பெற்றுக்கொடுத்தார்.

நாடு என்ற வகையில் நாம் அவருக்கு கடமைப்பட்டுள்ளோம்.

இதனை கூற நாங்கள் தயங்க போவதில்லை-என்றார். (அ)

# திருமலை மாணவருக்கு நியாயம் வழங்குவதில் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் தோல்வி

## இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு

திருமலை, செப். 06

**கிழக்கு மாகாண கல்வித்துறையினரால் திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியைக் களைந்து நியாயம் வழங்குவதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தோல்வி கண்டுள்ளார் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாணத்தில் சில பாடங்களுக்கு போதுமானளவு அல்லது மேலதிக ஆசிரியர்கள் இருப்பதாக் குறிப்பிடப்படுகின்றபோதிலும் திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. இதனை சமப்படுத்தி இக்குறையைப் போக்கவுள்ளதாக கிழக்கு ஆளுநர் உறுதியளித்திருந்தார்.

கிழக்கு ஆளுநராக கடமையேற்று 3 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னும் இந்த ஆசிரியர் சமப்படுத்தல்களை அவரால் செய்ய முடியவில்லை. இந்த விடயத்தில் அவர் உறுதியளித்த காலங்களும் கடந்து விட்டன. இதனால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதுடன், இந்த மாவட்ட



மாணவர்களுக்கு கற்றலில் சமவாய்ப்பு வழங்குவதில் கிழக்கு ஆளுநர் தோல்வி கண்டுள்ளார் என்று கருதவேண்டியுள்ளது.

கடந்த 2 மாதங்களுக்கு முன் வழங்கப்பட்ட கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனங்கள் மூலம் திருகோணமலை மாவட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரிடம் எனது கோரிக்கையை விடுத்திருந்தேன்.

கிழக்கில் போதுமானளவு ஆசிரியர்கள் அல்லது மேலதிக ஆசிரியர்கள் இருப்பதால் சமப்படுத்தல்கள் மூலம் திருகோணமலை மாவட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும் என அப்போது எனக்கு தெரிவிக்கப்பட்டது. இதனால் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கல்விக் கல்லூரி ஆசிரியர்கள் வேறு மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டார்கள்.

எனினும், இதுவரை திருகோணமலை மாவட்ட ஆசிரிய பற்றாக்குறை நிவரத்திக்கப்படவில்லை. இதனால் திருகோணமலை மாவட்ட மாணவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வரும் அதேவேளை இம்மாவட்டத்தைச் சேர்ந்த கல்விக் கல்லூரி ஆசிரியர்களும் வேறு மாகாணங்களுக்கு நிமிக்கப்பட்டதால் பெரும் சிரமங்களையும் அனுபவித்து வருகின்றனர்-என்றார்.



# காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் சௌபாக்கியா வீட்டுக்கு அடிக்கல் நடுகை

மட்டக்களப்பு, செப். 06

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுர்த்தி ரன்விமன வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மூன்று வீடுகளில் மூன்றாவது வீட்டுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமை முகாமையாளர், வலய முகாமையாளர், சமூக அபிவிருத்தி உதவியாளர், காத்தான்குடி பள்ளி வாயில்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பைத்துல் சக்காத் நிதிய தலைவர் டி. எம். அன்சார், மற்றும் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொது நிறுவனங்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இவ்வாறு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் புதிய காத்தான்குடி கிழக்கு பிரிவின் பயனாளியின் காணியில் அமைக்கப்படும் இவ் வீட்டிற்காக 750,000 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சான்றிதழ் வழங்கும் வைபவம்



அம்பாறை, செப். 06

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் 16 வயதுக்குட்பட்ட உதைப்பந்தாட்ட அணிக்கான உத்தியோகபூர்வ ரீ சேர்ட் அறிமுக நிகழ்வும் மற்றும் மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டியமைக்காக சான்றிதழ் வழங்கும் வைபவமும் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையின் காரியப்பர் மண்டபத்தில் இடம்பெற்றது .

பாடசாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிர் வழிகாட்டுதலில் உதைப்பந்தாட்ட பொறுப்பாசிரியர் எம்.எம். ரஜீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாடசாலையின் பிரதி அதிபர் எம்.எல்.ஏ. தன்சீல் உட்பட ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு உரையாற்றிய பாடசாலையின் அதிபர் எம். ஐ. ஜாபிர், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபட்டு, தமது திறமைகளை வெளிக்கொணர்ந்து வரும் மாணவர்களைப் பாராட்டிப் பேசியதோடு, அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர் உட்பட வெற்றிக்காகவும் பாடசாலையின் நற்பெயருக்காகவும் பாடுபட்ட அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக தமது நன்றிகளைத் தெரிவித்தார்.

(அ)

# பாரதியாரின் கொள்ளுப்பேரனார் திங்களன்று மட்டக்களப்பு வருகை






மட்டக்களப்பு, செப். 06

மஹாகவி பாரதியாருடைய கொள்ளுப்பேரன் கலாநிதி. இராஜ்குமார் பாரதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமத்திற்கு விஜயம் செய்தார்.

இல்ல மாணவர்களுடன் அளவளாவிய கலாநிதி இராஜ்குமார் பாரதி பாரதியார் பாடல்களை நினைவு கூர்ந்தார்.

இதேவேளை, கலாநிதி. இராஜ்குமார் பாரதி மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்திற்கும் விஜயம் செய்தார்.

செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி பாரதியாரின் நினைவு நாளையொட்டியே இந்த விஜயம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, ஆன்மீக அதிதியாக நீலமாதவனானந்த ஜீ மஹராஜ், முன்னிலை அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா, பிரதம அதிதியாக கிழக்குப்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், சிறப்பு அதிதியாக இளைப்பாறிய பேராசிரியர் சி. மௌனகுரு ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இதன்போது சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் முன்னால் அமைந்துள்ள பிரதான வீதியில் சுவாமி விபுலானந்தரினால் ஆராய்ச்சி செய்யப்பட்ட யாழ் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிழக்கு மாகாண மட்ட கராத்தே போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி சாதனை

அம்பாறை, செப். 06

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கராட்டே தைக்கொண்டோ சுற்றுப் போட்டியில் கலந்துகொண்ட கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் 6 தங்கப்பதக்கங்கள் , 2 வெள்ளிப் பதக்கங்கள், 8 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 16 பதக்கங்களை பெற்று கல்முனை வலயத்திற்கும், கல்லூரிக்கும் பெருமை தேடித்தந்துள்ளனர்.

இப்போட்டி மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி பிரதான மண்டபத்தில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெற்றது.

இதில் 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான வயதுப் பிரிவில் ஏ.பி.ஏ.ஹமீம் , ஜே. அஹமட் சுரைப் ,எம்.எச். அபான் அஹமட் ,கே.எம்.அக்தாஸ் ஆகியோர் தங்க பதக்கங்களையும், ஏ.பி.றஸா அஹமட் வெள்ளிப் பதக்கத்தையும், ஏ.கே.எம்.றஹ்மி ,ஜே.எம்.றிஹாஸ், ஏ.எம்.அப்ஸத் ,என்.எம்.றிபாத் ஆகியோர் வெண்கலப் பதக்கங்களையும் ,

18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான வயதுப் பிரிவில், எஸ்.வஜாகத் ,ஏ.ஏ.நதீஸ் தங்கப் பதக்கங்களையும் , ஆர்.எம். அல்தாப் வெள்ளிப் பதக்கத்தையும் , என்.ஏ.ஸிஹாமாஸ் ,ஏ.எம்.



அப்னான், எம்.எம்.அக்ஸாத், என். அயாஸ் அஹமட் ஆகியோர் வெண்கல பதக்கங்களையும் பெற்றுள்ளனர். (அ)

# நிபந்தனைகளை நிறைவேற்றாவிடில் தானிய ஏற்றுமதி ஒப்பந்தம் இல்லை!

## ரஷ்ய ஜனாதிபதி அறிவிப்பு

**மொஸ்கோ, செப். 06**

**ரஷ்யாவின் விவசாய ஏற்றுமதி தொடர்பான நிபந்தனைகளை மேற்கு நாடுகள் நிறைவேற்றிய பின்னரே, கருங்கடல் வழியாக உக்ரைனிய தானியங்களை பாதுகாப்பாக அனுப்புவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் ஒப்பந்தத்தை மீண்டும் நிலைநிறுத்த முடியும் என்ற தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி விளாடிமிர் புடின் மீண்டும் வலியுறுத்தினார்.**

திங்களன்று கருங்கடல் நகரமான சோச்சியில் துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகனுடனான சந்திப்பை தொடர்ந்து புடின் இதனை அறிவித்தார்.



உக்ரைன் தானியங்களை பாதுகாப்பாக ஏற்றுமதி செய்யும் ஒப்பந்தம் அமுலான போது, ரஷ்யாவின் உணவு மற்றும் உர ஏற்றுமதிக்கு தடைகளை அகற்றுவதாக உறுதியளிக்கும் ஒரு இணை ஒப்பந்தமும் உருவானது. ஆனால், மேற்கு நாடுகள் அதை முறையாக அமுலாக்கவில்லை. இந்த நிலையில், தானிய ஏற்றுமதி ஒப்பந்தம் ஜூலையில் முடிவடைந்தபோது, அதை நீடிக்க ரஷ்யா மறுத்து விட்டது.

தானிய ஏற்றுமதி தடைப்பட்டதால் உலகளாவிய உணவு நெருக்கடி அச்சம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஆபிரிக்க, ஆசிய நாடுகளே இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

அத்துடன், கருங்கடல் தானிய தாழ்வாரங்களை இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்தக்கூடாது என்றும் புடின் கூறினார். அந்த வாக்குறுதிகள் மதிக்கப்பட்டால், ரஷ்யா "நாட்களுக்குள்" ஒப்பந்தத்திற்கு திரும்ப முடியும் என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

விரைவில் ஒரு திருப்புமுனை வரலாம் என்றும் எர்டோகன் நம்பிக்கை தெரிவித்தார். துருக்கி மற்றும் ஐ.நா - இரண்டும் அசல் ஒப்பந்தத்தின் தரகர்கள் - சிக்கலைத் தடுக்க புதிய திட்டங்களை ஒன்றாக இணைத்துள்ளன என்று அவர் கூறினார்.

"குறைபாடுகளை சரிசெய்வதன் மூலம் முன்முயற்சி தொடர வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று உக்ரைனுக்கும் ரஷ்யாவிற்கும் இடையில் மத்தியஸ்தராகப் பொறுப்பேற்றுள்ள துருக்கிய ஜனாதிபதி கூறினார். மே மாதம் எர்டோகன் மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இரு தலைவர்களுக்கும் இடையிலான முதல் சந்திப்பு இதுவாகும்.

எனினும், அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ரஷ்யாவின் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளன. அவற்றின் தடை இலக்கு ரஷ்ய தானியங்கள் மற்றும் உரங்கள் இல்லை என்று கூறின.

ஒப்பந்தத்தை புதுப்பிக்கத் தவறினால், உக்ரைனிய மற்றும் ரஷ்ய தானியங்களை பெரிதும் நம்பியிருக்கும் பல ஆபிரிக்க நாடுகளில் "கடுமையான தாக்கங்கள்" ஏற்படும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

அதை நிவர்த்தி செய்யும் முயற்சியில், ஆறு ஆபிரிக்க நாடுகளுக்கு இலவச தானியங்களை இன்னும் சில வாரங்களில் வழங்கவுள்ளதாகவும் புடின் சோச்சியில் செய்தியாளர்களிடம் கூறினார்.

"நாங்கள் ஆறு ஆபிரிக்க நாடுகளுடன் ஒப்பந்தங்களை முடிக்க நெருங்கிவிட்டோம். அங்கு நாங்கள் உணவுப் பொருட்களை இலவசமாக வழங்க விரும்புகிறோம். மேலும் விநியோகம் மற்றும் தளபாடங்கள் கொள்ளை இலவசமாகச் செய்ய விரும்புகிறோம்," என்று அவர் கூறினார்.

(அ)

# வட கொரிய ஜனாதிபதி ரஷ்யாவுக்கு செல்கிறார்!



மொஸ்கோ, செப். 06

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் இந்த மாதம் ரஷ்யாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்து, உக்ரைனுக்கு எதிரான போருக்கான ஆயுதங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விவாதிக்க திட்டமிட்டுள்ளதாக நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக வடகொரிய அதிபர் கிம் பியொங்யாங்கில் இருந்து கவச ரயிலில் ரஷ்யாவுக்கு பயணம் செய்வார் என தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், சந்திப்பு இடம் பெறும் இடம் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

உக்ரைனுக்கு எதிரான போருக்காக ரஷ்யாவுக்கு அதிகளவில் ஆயுதங்களை வழங்க வடகொரியா தயாராகி வருவதாக அண்மையில் வெள்ளை மாளிகை தகவல் வெளியிட்டிருந்தது.

குறித்த இரண்டு நாடுகளினதும் தலைவர்களின் சந்திப்பு தொடர்பான விபரங்கள் வெளியாகியுள்ளன.

உக்ரைன் - ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையே போர் தொடர்ந்து நீடித்துவரும் நிலையில் வட கொரியா அதிக ஆயுதங்களை வழங்கக்கூடும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஜீ-20 மாநாட்டில் ஜின்பிங் கலந்துகொள்ள மாட்டார்

பீஜிங், செப். 06

இந்தியாவில் நடைபெறும் ஜீ 20 மாநாட்டில் சீன ஜனாதிபதி பதிலாக அந்நாட்டு பிரதமர் கலந்துகொள்வார் என சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெறும் ஜீ 20 உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள போவதில்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் முதலில் அறிவித்தார்.

இதனை தொடர்ந்து சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் மாநாட்டில் கலந்துக்கொள்ளமாட்டார் என சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசின் அழைப்பின் பேரில் 9 ஆம்,10 ஆம் திகதிகளில் நடைபெறும் 18ஆவது ஜீ 20 மாநாட்டில் சீனப் பிரதமர் லீ கியாங் கலந்து கொள்கிறார்.

இந்த உச்சி மாநாட்டில் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் குறித்து ஒருமித்த கருத்து எட்டப்பட்டு



இரு நாடுகளின் வளர்ச்சிக்கான பங்களிப்பு உருவாகும் என மாவோ நிங் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளுக்கு சீனா எப்போதும் அதிக முன்னுரிமை வழங்கி வருவதாகவும், இது தொடர்பாக நடத்தப்பட்ட பல சந்திப்புகளிலும் இருநாடுகளின் தலைவர்கள் தீவிரமாக பங்கேற்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, கூட்டாட்சி நாடுகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவது, உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்படுவது ஆகிய விவகாரங்களில் சீனாவின் கருத்தை சீனப் பிரதமர் லீ கியாங் இந்தக் கூட்டத்தில் வெளியிடுவார்.

நிலையான சர்வதேச பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலையான வளர்ச்சியை மேம்படுத்த ஏனைய ஜீ 20 நட்பு நாடுகளுடன் இணைந்து செயற்படுவோம் எனவும் மாவோ நிங் மேலும் தெரிவித்துள்ளார்.(அ)

# தென்னாபிரிக்கா ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்கவில்லை



கேப்ரவுண், செப். 06

தென்னாபிரிக்காவிலிருந்து ரஷ்யாவுகு ஆயுதங்கள் வழங்கப்பட்டு வருவதாக வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா தெரிவித்துள்ளார்.

தனது நாடு ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு எந்த ஆதாரமும் சுயாதீன விசாரணையில் கண்டறியப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், 50 பேரிடம் நடத்திய நேர்காணல் மற்றும் 100க்கும் மேற்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்ததன் அடிப்படையில் ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# பாடசாலைகளில் சீருடைகள் அறிமுகப்படுத்தும் பிரான்ஸ்

பாரிஸ், செப். 06

பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

பிரான்சில் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் பெரும்பாலும் சீருடை அணிவதில்லை. தனியார் மதபாடசாலைகள் அல்லது இராணுவ பாடசாலைகளிலேயே சீருடை அணியப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன.

இந்த நிலையில், தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் சீருடைகளை அறிமுகப்படுத்துவதற்கான முன்னோடி திட்டத்தினை மேற்கொள்ள விரும்புவதாக புதிய கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் விவாதங்களை முன்னெடுக்க முடியாது எனவும், ஒரு யோசனையினை பெறுவதற்கான சிறந்த வழி பாடசாலைகளில் விடயத்தினை பரிட்சிப்பதுதான் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, பரிட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பாடசாலைகளை தெரிவு செய்வதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் அமுல்படுத்தப்பட்ட அபாயா தடையைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# குற்றம், ஊழலற்ற இலங்கையை கட்டியெழுப்ப ஐ. நா. ஒத்துழைக்கும்

## நீதி அமைச்சரிடம் ஐ. நா. பிரதிநிதி உறுதி

கொழும்பு, செப். 06

**மோசடியாக சொத்துக்களை சம்பாதித்து வெளிநாடுகளில் வைப்பிலிட்டிருக்கும் நபர்களின் பணத்தை மீள பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் காரியாலயம் இணக்கம் தெரிவித்துள்ளது. இதன் பிரகாரம் அந்த நடவடிக்கையை எதிர்வரும் சில தினங்களில் ஆரம்பிப்போம் என நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.**



இவ்வாறன முறையில் பணம் சம்பாதிக்கொண்டு வெளிநாடுகளில் வைப்பிலிட்டிருக்கும் நபர்களின் பணத்தை மீள பெற்றுக் கொள்வது தொடர்பாக உலக வங்கி சார்பாக போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பணிமனை நடவடிக்கை எடுப்பதாகவும் புதிய ஊழல் எதிர்ப்பு சட்டம் இந்த மாதம் 15ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறுவதுடன் அவ்வாறான நபர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க புதிய ஊழல் எதிர்ப்பு விசாரணை ஆணைக்குழுவுக்கு முடியுமாகிறது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நீதி அமைச்சர் மற்றும் போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் காரியாலயத்தின் தெற்காசிய பிராந்தியத்தின் பிரதிநிதி மேர்கன் டெக்சேரா ஆகியோருக்கிடையில் விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் நீதி அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இந்த விடயங்களை தெரிவித்தார்.

மேலும், திருடப்பட்ட சொத்துக்களை மீள பெற்றுக்கொள்வதற்காக உலக வங்கி மற்றும் போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் காரியாலயத்துடன் இணைந்து செயற்படுகின்ற ஸ்டார் முறைமைக்கு அமைய மோசடியான முறையில் சொத்துக்களை சம்பாதித்து வெளிநாடுகளில் வைப்பிலிட்டிருக்கும் நபர்களின் பணத்தை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

போதைப்பொருள், குற்றங்கள், ஊழல் மற்றும் பயங்கரவாதமற்ற உலகை பாதுகாத்தல், உலக சமாதானத்தை பாதுகாத்தல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பங்களிப்பு செய்தலை நோக்காக்கொண்டு 1997ஆம் ஆண்டு போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் காரியாலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

குற்றங்கள் இடம்பெறுவதை தவிர்ப்பதற்காக நாட்டில் செயற்படும் நீதிமன்ற நடவடிக்கை, ஊழலை கட்டுப்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள புதிய ஊழல் எதிர்ப்பு சட்டம், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையாகியவர்களை புனர்வாழ்வளிப்பதற்காக செயற்படும் புனர்வாழ்வு செயற்பாடுகள் தொடர்பாகவும் அமைச்சர் இதன்போது தெளிவுபடுத்தினார்.

இலங்கையில் குற்றங்கள் மற்றும் ஊழலை கட்டுப்படுத்துவதற்கு இதுவரை பல வேலைத் திட்டங்கள் செயற்படுகின்ற நிலையில், எதிர்காலத்தில் மேலும் இந்த வேலைத்திட்டங்களை உறுதியுடன் செயற்படுத்துவதற்கும் குற்றங்கள் மற்றும் ஊழல் அற்ற நாடொன்றை ஏற்படுத்துவதற்காக தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் இலங்கைக்கு வழங்குவதாக போதைப் பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பணிமணையின் தெற்காசிய பிராந்தியத்தின் பிரதிநிதி இதன்போது தெரிவித்தார் என்று ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# 7 பேருக்கு உயிர் கொடுத்த மாணவி உயர்தரப் பரீட்சையில் 3 ஏ சித்தி!



கொழும்பு, செப். 06

மூளைச்சாவடைந்ததால் தனது உடல் உறுப்புகளை வழங்கி ஏழு பேருக்கு உயிர் கொடுத்து, இவ்வுலகைவிட்டு சென்ற 19 வயது மாணவியான விஹகனா ஆரியசிங்க, உயர்தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறை பெற்றுள்ளார்.

குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியில் இருந்து வர்த்தக பிரிவில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய அவர், மூன்று ஏ சித்திகளை பெற்றுள்ளார்.

மாவட்ட மட்டத்தில் 176 ஆவது இடத்தையும், தேசிய மட்டத்தில் 2,256ஆவது இடத்தையும் பெற்றுள்ளார். 1.7 இஸட் புள்ளிகளை பெற்றுள்ளார்.

குருநாகல் பகுதியில் மூளை புற்று நோய் காரணமாக மூளைச் சாவடைந்த மாணவியொருவர் தனது உடல் உறுப்புகளை வழங்கி 7 பேரின் உயிரை காப்பாற்றிய நெகிழ்ச்சியான சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

இலங்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள்குழுவொன்று இதயம் மற்றும் நுரையீரல் இரண்டையும் ஒரே நோயாளிக்கு மாற்றுவதற்கான முதல் சத்திரசிகிச்சையை மேற்கொண்டு சாதனை படைத்துள்ளது.

இதன்போது உறவினர்களின் அனுமதியுடன் மூளைச்சாவடைந்த மாணவியின் இதயம் மற்றும் நுரையீரல்கள் என்பன இதயம் மற்றும் நுரையீரல் செயலிழந்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த மருத்துவ நிபுணருக்கு பொருத்தப்பட்டுள்ளன.

குறித்த மாணவியிடமிருந்து எடுக்கப்பட்ட இரண்டு சிறுநீரகங்களும் குருநாகல் போதனா வைத்தியசாலையின் சிறுநீரகப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவருக்கு வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டன.

மேலும், கல்லீரல் மற்றும் கண் சவ்வுகள் என்பன மூன்று பேருக்கு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவும் வகையில் வழங்கப்பட்டுள்ளதுடன், விஹகனாவின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட 5 உறுப்புகள் மூலம் ஏழு பேரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது. (அ)

# ஒரு இலட்சத்து 66,938 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி

கொழும்பு, செப். 06

2022 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 166,938 மாணவர்கள் அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான தேவையை பூர்த்தி செய்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, 2022 க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 149,487 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 17,451 தனியார் விண்ணப்பதாரர்களும் பல்கலைக்கழக அனுமதிக்கு தேவையான சித்திகளைப் பெற்றுள்ளனர். (அ)

# 8 மாதங்களுக்குள் 2 இலட்சம் பேர் தொழில் நிமித்தம் வெளிநாட்டுக்கு

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

கொழும்பு, செப். 06

2023ஆம் ஆண்டு ஆரம்ப 8மாதங்களுக்குள் 200387 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். இவர்களில் 113635 ஆண் தொழிலாளர்கள் என்பதுடன் 86752 பேர் பெண் தொழிலாளர்களாகும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையர்கள் அதிகமாக தொழில் நிமித்தம் சென்றிருப்பது சவூதி அரேபியாவுக்கு என்பதுடன் இதன் எண்ணிக்கை 44827 ஆகும். இரண்டாவதாக குவைட் நாட்டுக்கே அதிகமானவர்கள் தொழில் நிமித்தம் சென்றுள்ளனர். அதன் எண்ணிக்கை 39000 ஆகும். மூன்று மற்றும் நான்காவதாக கட்டார் மற்றும் ஐக்கிய அரபு ராச்சியத்துக்கே அதிகமானவர்கள் தொழில் நிமித்தம் சென்றிருக்கின்றனர். அதன் எண்ணிக்கை முறையே 34 166 மற்றும் 25 058 ஆகும்.

அத்துடன் ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கையர்கள் தொழிலுக்காக அனுப்பப்படும் போக்கில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023ஆம் ஆண்டு முதல் 8 மாதங்களுக்குள் ருமேனியாவுக்கு 9916பேர் தொழில் நிமித்தம் சென்றுள்ளனர்.

அத்துடன் பயிற்சி மற்றும் தொழில் சேவைக்காக 152591பேர் சென்றுள்ளதுடன் வீட்டு பராமரிப்பு உதவியாளர் பதவிக்காக 47796பேர் மாத்திரமே சென்றுள்ளனர்.

மாவட்ட அடிப்படையில் பார்க்கும்போது தொழில் நிமித்தம் கொழும்பு மாவட்டத்தில் இருந்தே அதிகமானவர்கள் வெளிநாடு சென்றுள்ளனர். அதன் எண்ணிக்கை 22801ஆகும். கம்பஹா மாவட்டத்தில் இருந்து 20957 பேரும் கண்டி மாவட்டத்தில் இருந்து 19222பேரும் குருநாகல் மாவட்டத்தில் இருந்து 17777பேரும் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 11831பேர் வெளிநாடு சென்றுள்ளனர்.

2022ஆம் ஆண்டு 310967 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். (அ)

# யாழ். கல்வியியல் கல்லூரியில் தர்மலிங்கம் நினைவுப் பேருரை





யாழ்ப்பாணம், செப். 06

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நேற்று முன்தினம் காலை மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கம் நினைவுப் பேருரை முதன் முறையாக நிகழ்த்தப்பட்டது.

கல்லூரியின் பீடாதிபதி சு. பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச லலீசன் - தர்மலிங்கம் தந்த கொடை என்ற பொருளில் நினைவு பேருரை ஆற்றினார்.

கல்வியியல் கல்லூரிக்கு தர்மலிங்கம் குடும்பத்தார் 220 பரப்பு காணியை கோப்பாய் பிரதேசத்தில் உவந்து அளித்ததன் மூலம் ஏற்பட்ட விளைவுகளை விதந்து பேசினார். குறிப்பாக கடந்த 23 ஆண்டுகளில் 4500 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று இலங்கையின் பல பாகங்களிலும் சேவையாற்றுவதாக தெரிவித்தார்.

கல்லூரியின் கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுகளை கலாநிதி பா. தனபாலன் முன்னிலைப்படுத்தினார் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் நிறைவுரை ஆற்றினார்.

கல்லூரி சமூகத்தினரும் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் அபிமானிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## பொலிஸ்...

ஊழியர்களும் ஒத்துழைப்பு வழங்கினர் என்றும் அங்கிருந்த பக்தர்கள் விசனம் தெரிவித்தனர்.

மேலும், தென்னிலங்கையை சேர்ந்தவரான அந்த நபர் காலணியுடன் ஆலய வளாக பகுதியில் நடமாடினார் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த சம்பவம் தொடர்பில் அறிந்த யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வ. பார்த்தீபன் அங்கு நின்ற பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அத்துடன், இந்த வாகனத்தை எந்த அடிப்படையில் அனுமதித்தார்கள் என்று பொலிஸாரிடம் கேள்வி எழுப்பியபோது, அங்கு நின்ற பொலிஸார், "அவர் பொலிஸ் மா அதிபரின் சகோதரர். அவரை எப்படி நாம் மறிப்பது என்று கேள்வி எழுப்பினர்.

இதனிடையே, வேறு பொலிஸார் காரின் உரிமையாளரை மீண்டும் அழைத்து வந்து அங்கிருந்து அந்த வாகனத்தை எடுப்பித்தனர். இதைத் தொடர்ந்து அப்பகுதியில் நிலைமை சுமுகத்துக்கு வந்தது.

இதேவேளை, நல்லூர் ஆலயத்தை சூழவுள்ள தடைப் பகுதிகளில் செல்வாக்கு படைத்த பலர் தமது வாகனங்களுடன் உள்நுழைகின்றனர். காலணிகளுடன் அங்கு பரவப்பட்டுள்ள மணல் பகுதிகளில் நடந்து திரிகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆனால், இந்த நபர்களை கண்டுகொள்ளாத பொலிஸாரும் மாநகர சபையினரும் வயோதிபர்கள், இயலாதவர்கள் விடயத்தில் மிகவும் இறுக்கமாக நடந்து கொள்கின்றனர் என்றும் சமூக வலைத்தளங்களில் விசனம் வெளியிடப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரதான...

இந்த நாட்டின் மக்களுக்கு, நாட்டின் தேசியப் பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்னைகள் காணப்பட்டன. அந்த பிரச்னைகளில் இருந்து நாங்கள் பின்வாங்கினோம், கோட்டாபய முன்னிலையானார் என்பதே உண்மை. அந்த நம்பிக்கையில்தான் அவரை மக்கள் ஜனாதிபதியாக்கினர்.

சர்வதேச ஆய்வொன்றில், சர்வதேச ஊடகமொன்றில் எமது நாட்டின் அதிகாரிகளுக்கு விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஆலோசனை வேண்டுமென கூற வேண்டுமா?

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்களை கண்டறிய வெளிநாட்டு உபதேசங்கள் எமக்கு அவசியமா? எமது நாட்டின் ஆட்சியாளர்களுக்கு மனசாட்சி இல்லையா? உண்மைகளை கண்டறியவும், உண்மையை பேசவும் எமது நாட்டு அரசியல்வாதிகளுக்கு பொறுப்பில்லையா? - பேராயர் கர்தினால் எனக்கு எதிராக வாக்களிக்குமாறு கூறியதற்கு நான் கவலைப்படவில்லை. அவர் தமது மனதுக்குள் இருந்த கவலை காரணமாக அவ்வாறு கூறியிருந்தால் நான் அதற்காக கவலைப்பட போவதில்லை.

கிறிஸ்தவ மக்களுக்கு இந்த கவலை இன்னமும் உள்ளது. எமது நாட்டின் உள்ளக விசாரணைகளின் ஊடாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியை கண்டறிய முடியாது. இதற்கு சர்வதேச விசாரணையொன்று அவசியமாகும்.

பேராயர் கர்தினாலுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டாம். கிறிஸ்தவ மக்கள் மற்றும் மதத் தலைவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த வேண்டாம். தற்போதைய ஆட்சியாளர்களுக்கு அதிகாரத்துக்கு வருவதற்கு மாத்திரமே தேவை இருந்தது. ஆனால், கிறிஸ்தவ மக்களின் மனங்களில் இன்னமும் அந்த வேதனை உள்ளது. அதனால்தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து முதலை கண்ணீர் வடித்தனர். ஆகவே, உடனடியாக சர்வதேச விசாரணையொன்று அவசியமாகும். அதற்கு அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இல்லையா - என்றார். (ஐ)

# கடன் மறுசீரமைப்பின்போது ஒப்பந்தங்களை செய்ய முயற்சி!

கொழும்பு, செப். 06

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான தமது 300 கோடி அமெரிக்க டொலர் கடன் திட்டத்தின் முதல் மதிப்பாய்வை மேற்கொள்ள உள்ளமையால், இந்த மாதம் கடன் மறுசீரமைப்பில் பெரிய ஒப்பந்தங்களை உருவாக்குவதற்கு இலங்கை எதிர்பார்ப்பதாக ப்ளூாம்பேர்க் செய்தி வெளியிட்டுள்ளது.

வரிச் சட்டங்களைத் திருத்தும் சட்ட மூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டு சட்டத் தடை நீக்கப்படும் என எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியிள் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் உள்நாட்டு கடன்மறுசீரமைப்பு திட்டத்தை இந்த மாதத்தின் நடுப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கு அது அனுமதிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலீட்டாளர்கள் மன்றத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், இலங்கையின் வெளிநாட்டுக் கடனை எவ்வாறு மறுசீரமைப்பது என்பது குறித்து இந்த மாதம் உடன்பாடு எட்டப்படும் என அதிகாரிகள் எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இதேவேளை, உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கான முடிவு எதிர்வரும் 10 முதல் 15 நாட்களில் சாத்தியமாகும் என தெற்காசிய பொருளாதார நிபுணரான சவுரவ் ஆனந்த்தும் தெரிவித்துள்ளதாக ப்ளூம்பேர்க் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெறும் சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பாய்வு வெற்றிகரமாக நிறைவு செய்யப்படுமாயின் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் இலங்கைக்கு சுமார் 33 கோடி டொலர்கள் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## பிள்ளையான்...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரித்தானிய ஊடகமான சனல் 4 ஊடாக வெளியான தகவல் சாதாரணமான விடயமல்ல. அதன் சூத்திரதாரியாக கிழக்கு மாகாணத்தின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை காட்டிக்கொடுத்த பிள்ளையான் இருக்கின்றார்.

பிள்ளையான் இலங்கை இராணுவத்துடன் இணைந்து 2009ஆம் ஆண்டு வரை தமிழர்கள் பலர் கொல்லப்படவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்படவும் காரணமாக இருந்துள்ளார்.

இந்நிலையில், 2020 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சியை கைப்பற்றும் நோக்கில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரங்கேற்றி அந்த பழியை முஸ்லிம் மக்கள் மீது சுமத்தியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்காற்றிய முஸ்லிம் சமூகத்தை ஒரே நாளில் குற்றவாளியாக்கி அவர்களின் பொருளாதாரத்தை அழித்துள்ளனர்.

சிங்கள மக்களை முஸ்லிம் மக்களுக்கு எதிராக திருப்பியிருந்தனர். இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறு வாக்குகளை பெற்றுக்கொண்டார்கள் என்பது யாவரும் அறிந்த ஒன்றே. சிங்கள மக்கள் ஒன்றை நிதானமாக சிந்திக்க வேண்டும். 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள முடியாத இராணுவத்தினர் சிங்கள மக்கள், பிக்குகள் பயணித்த பேருந்தில் குண்டு வைத்தனர்.

இதன் மூலம் சிங்கள மக்களை தமிழ் மக்களுக்கு எதிராகவும் - விடுதலை புலிகளுக்கு எதிராகவும் கோபப்பட வைத்து ஓர் இன அழிப்பை மேற்கொள்வதற்கு ராஜபக்ஷர்கள் சதி செய்தனர்.

இதனை, சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாக மட்டுமே வெளிக்கொண்டு வர முடியும். இந்நிலையில், பிள்ளையான் போன்றவர்கள் ராஜபக்ஷர்கள் உடனடியாக கைதுசெய்யப்பட வேண்டும். அவர்களுக்கு எதிராக சர்தேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்" - என்றார். (ஐ)

## ஆட்சியை...

உயிர்த்த ஞாயிறு தினத் ற்கொலைத் தாக்குதலில் சாதாரண பொதுமக்களே ஆலயங்களிலும் ஹோட்டல்களிலும் கொன்று குவிக்கப்பட்டனர். இவர்கள் கொல்லப்பட்டமை ஆட்சியை கைப்பற்றுவதற்காகவா என்று கேள்வி எழுப்புகிறார் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த ஆஸாத் மௌலானா.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசியலில் மிகவும் விசுவாசமாக செயல்பட்ட பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனுடன் ஆஸாத் மௌலானா அரசியலில் ஈடுபட்டு வந்தவர். "என்னிடம் ஆபத்தான கைதிகள்உள்ளனர். அவர்கள் கடும்போக்கானவர்கள். அவர்களில் ஒருவரை சந்திக்குமாறு (சிறையில் இருந்த) பிள்ளையான் என்னிடம் தெரிவித்தார்"- என ஆஸாத் மௌலானா குறிப்பிடுகின்றார்.

இதையடுத்து இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான தேசிய தவ்ஹீத் ஜமாத்தை சேர்ந்த செய்னி மௌலவியை தான் சந்தித்தார் எனவும் - கடந்த 2018ஆம் ஆண்டு ஜனவரி பிள்ளையான் உளவுத் துறை அதிகாரி சுரேஷ் சாலேக்கும் அந்த அமைப்பினருக்கும் இடையில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு தன்னிடம் கூறினார் எனவும் ஆஸாத் மௌலானா குறிப்பிடுகின்றார்.

இதையடுத்துத் தான் தேசிய தவ்ஹீத் ஜமாத்தை சேர்ந்தவர்களுக்கும் உளவுத் துறை அதிகாரி சுரேஷ் சாலேக்கும் இடையிலான சந்திப்பை ஏற்பாடு செய்தார் எனவும், சந்திப்பு நிறைவடைந்து வெளியில் வந்த சுரேஷ் சாலே "ராஜபக்ஷர்களுக்கு இலங்கையில் ஒரு குழப்பமான நிலை தேவையாக உள்ளது. அதுவே கோட்டாபய ராஜபக் ஷவை ஜனாதிபதியாக்க ஒருயொரு வழி" என்று கூறினார் எனவும் ஆஸாத் மௌலானா அக்காணொலியில் குறிப்பிடுகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற பின்னர், முன்னர் யாரெல்லாம் சந்திப்பில் கலந்துகொண்டார்களோ அவர்களின் முகங்களைத் தான் அடையாளம் கண்டார் எனவும், பிள்ளையானிடம் இதுபற்றி கேட்ட போது "நீ வாயை மூடிக்கொண்டு எதுவும் தெரியாதது போல் இரு. அது போதும்" என அவர் தன்னிடம் கூறினார் எனவும் தெரிவிக்கும் ஆஸாத் மௌலானா, "சொந்த மக்களையே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற அவர்கள் கொலை செய்தார்கள். இதுவொரு கசப்பான உண்மை" - என்கிறார். (ஐ)

## கொக்குத்தொடு...

செ. பிரணவன் உள்ளிட்டவர்கள் குறித்த பகுதிக்கு சென்றிருந்தனர். இதன்போது, பொதுமக்கள், அரசியல்வாதிகள் எனப் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

எனினும், சீரற்ற வானிலையால் நேற்றைய தினம் அகழ்வு பணிகள் நடைபெறவில்லை.

இது தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரி வசுதேவா ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

சீரற்ற வானிலையால் மனிதப் புதைகுழி அகழ்வு பணி நாளை (இன்று) காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் - என்றார்.

அகழ்வு பணிகள் எவ்வளவு காலத்துக்கு தொடரும் என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

"ஏற்கனவே 13 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எப்போது நிறைவடையும் என்பது பற்றி தற்போது கூறமுடியாது. அகழ்வு பணி தொடர்ந்து நடக்கும் பட்சத்தில் எவ்வளவு காலம் நடைபெறும். எத்தனை எலும்புக்கூடுகள் இருக்கும் என்பது தொடர்பாகக் கூற முடியும் - என்றார். (ஐ)

## நான்...

உரியவர்கள் உதவ வேண்டும் என்று கண்ணீர் மல்க கோரிக்கையை முன்வைத்தார்.

கல்வியங்காட்டில் உள்ள இல்லத்தில் ஊடகங்க ளுக்கு இன்று கருத்துத் தெரிவித்த போதே தந்தையார் சுந்தரலிங்கம் அருணகிரிநாதர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: -

2006 ஒக்ரோபர் 25ஆம் திகதி நல்லூர் அரசடி சோதனைச் சாவடியில் இராணுவத்தால் எனது மகன் அருணகிரிநாதன் சுதன் பிடித்து செல்லப்பட்டார். இதன் பின்னர் சில காலம் எனது மகனை இராணுத்தினர் வைத்திருந்ததை எமது உறவினர்கள், நண்பர்கள் பலரும் கண்டு எனக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

இந்த விடயத்தை பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்திய போதும் - அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து பேசியபோது, 48 பேர் கொண்ட கைதிப்பட்டியலில் எனது மகனும் இருப்பதை உறுதிப்படுத்தியபோதும் எனது மகனை விடுவிக்கவில்லை.

"நாங்கள் நிரபராதிகள் விடுதலைக்கு உதவுங்கள் பூசாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் அமைச்சர்களிடம் வேண்டுகோள்" எனும் தலைப்பில் 2007 செப்ரெம்பர் 8ஆம் திகதி 'தினக்குரல்' பத்திரிகையில் வெளியான செய்தியில் உள்ள புகைப்படத்தில் எனது மகனும் சிறைக்குள் இருப்பது தெரிய வந்தது.

தினக்குரலில் வெளியான செய்தியின் படி அப்போது இருந்த அமைச்சர் ராஜித சேனராத்ன பிரதி அமைச்சர்களான பி.ராதாகிருஸ்ணன், கே. ஏ. பாயிஸ் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், உள்ளிட்ட பலரும் பூசா முகாமில் கைதிகளை பார்வையிட்டனர் என்றுள்ளது. இது தொடர்பில் தற்போதும் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ராஜித சேனாரட்ன உள்ளிட்ட அதிகாரிகள் உண்மை நிலையை தெளிவுபடுத்த வேண்டும்.

சிறைச்சாலையில் இருந்து பரீட்சை எழுதும் கைதிகள் தொடர்பாக மேலுமோர் இணைய ஊடகமொன்றில் தற்போது வெளியான புகைப்படத்தில் எனது மகன் இருப்பதும் அறியவந்தது.

இவ்வாறு எனது மகன் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 077 632 3036 என்ற இலக்கம் ஊடாக தொடர்பு கொள்ளுங்கள். எனது மகன் பற்றிய விடயங்களை காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம், மனித உரிமைகள் ஆணைக்குழு, சிறைச்சாலைகள் என இதுவரை பல இடங்களுக்கு சென்றபோதும் உரிய பதில் கிடைக்கவில்லை.

அண்மையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகம் குறிப்பிட்ட சிலரை கண்டுபிடித்ததாகத் தெரிவித்தது. இந்நிலையில், எனது மகனை கண்டுபிடித்து தர வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்கா செல்ல முன் கியூபா பறக்கிறார் ரணில்

## செப். 21 ஐ.நா.வில் உரை

கொழும்பு, செப். 06

முக்கிய இரு சர்வதேச மாநாடுகளில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 13ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்படவுள்ளார்.

அமெரிக்கா, நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச் சபையின் வருடாந்த அமர்வு மற்றும் கியூபாவின் ஹவானாவில் நடைபெறவுள்ள ஜி-77 மாநாட்டில் ஜனாதிபதி கலந்துகொள்கின்றார்.

முதலில் கியூபாவின் ஹவானா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜி-77 மாநாட்டில் பங்கேற்பார்.

ஜி-77 உச்சி மாநாடு என்பது பொருளாதார ரீதியாக வளரும் 134 நாடுகளின் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாகும். அவ்வமைப்பில் இலங்கையும் அங்கம் வகிக்கின்றது.

இம்மாநாடு முடிவடைந்த பின்னர் நியூயோர்க் செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா. பொதுச் சபையின் வருடாந்த அமர்வில் பங்கேற்கவுள்ளார்.

ஐ.நா. பொதுச் சபையின் வருடாந்த அமர்வு எதிர்வரும் செப்டெம்பர் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன், எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி உரையாற்றவுள்ளார். (அ)

# நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக 6 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு

கொழும்பு, செப். 06

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் ஆயிரத்து 630 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 49 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம், மண்சரிவு மற்றும் காற்றால் 122 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. ஒருவர் உயிரிழந்துள்ளார். (அ)

# சனல் 4 காணொலி தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணை

## சபையில் தெரிவித்தார் மனுஷ நாணயக்கார

கொழும்பு, செப். 06

**அதிகாலையில் சென்று கோட்டாபயவுக்கு வாக்களியுங்கள் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டார். அதேபோல் ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தை கண்ணீருடன் குறிப்பிட்டவர்கள் அனைவரும் கோட்டாபயவின் தேர்தல் பிரசாரத்துக்கு உடந்தையாக இருந்தார்கள். சனல் 4 வெளியிட்டுள்ள காணொலி தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்ள அவதானம் செலுத்தியுள்ளோம் என வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி-

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் - 4 வெளியிட்டுள்ள காணொலி மற்றும் அதன் உள்ளடக்கம் பாரதூரமானது.

நாட்டு மக்களை கொன்று இரத்தத்தின் ஊடாக ஒரு தரப்பினர் ஆட்சியை கைப்பற்றியிருந்தால் அது குறித்து முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த விடயம் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் -4 வெளியிட்டுள்ள காணொளி குறித்து ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தினோம்.

இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் தேவையாயின் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் விவகாரம் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்காது.

ஜெனிவா கூட்டத்தொடர் இடம்பெறவுள்ள நிலையில் தான் இவ்வாறான காணொலிகள் வெளியாகுகின்றன.



கோட்டபயவின் தேர்தல் வெற்றிக்காக குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அவ்வாறாயின் அதிகாலையில் சென்று கோட்டபயவுக்கு வாக்களியுங்கள் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அப்போது குறிப்பிட்டார்.

மறுபுறம் ஒருதரப்பினர் அழுதுகொண்டு ஒரு தரப்புக்கு சார்பாக செயற்பட்டார்கள். ஆகவே இவர்கள் அனைவரும் கோட்டபயவின் தேர்தல் பிரசாரத்துக்கு உடந்தையாக செயற்பட்டவர்களாக கருத வேண்டும்- என்றார். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் நினைவு கிழக்கு பல்கலையில்





மட்டக்களப்பு, செப். 06

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு வலிந்து காணாமால் ஆக்கப்பட்டவர்களின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாக முன்றலில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்கம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றியம் இணைந்து ஏற்பாடு செய்த நினைவேந்தலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சர்வதேச நீதிப்பொறிமுறையின கீழ் காணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க வலியுறுத்தி அமைதியான முறையில் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரில் முதல் பெயரே இலங்கை நீதி தேவதைதான்,எமது உறவுகள் எமக்கு வேண்டும்,எமக்கு சர்வதேச விசாரணை வேண்டும், எங்கே எங்கே உறவுகள் எங்கே,இன்னும் எத்தனை நாட்கள் நாங்கள் நீதிக்காக போராடவேண்டும்?, எமக்கு நீதியான விசாரணை வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

அதனை தொடர்ந்து காணமால் ஆக்கப்பட்டவர்களை நினைவு கூர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (அ)

# உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க முடியாது!

## கல்வி அமைச்சர்



கொழும்பு, செப். 06

உயர்தரப் பரீட்சை(2023) ஒத்திவைக்கப்படுவதனால் சாதாரணதரப் பரீட்சைகள் மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை பாடத்திட்டத்தின் நிறைவு பாதிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதன் காரணமாக உயர்தரப் பரீட்சைகளை ஒத்தி வைக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

உயர்தரப் பரீட்சைகளை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர உள்ளிட்ட அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், உயர்தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் அமைச்சர் கூறினார்.

இந்நிலையில் தேர்வுகளை மீண்டும் எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு இது நியாயமற்றது எனவும், மாணவர்கள் தேர்வுக்குத் தயாராகும் நேரம் போதுமானதாக இல்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# உலகக் கிண்ணத் தொடர் இந்திய அணி அறிவிப்பு!

மும்பை, செப். 06

அடுத்த மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ண தொடருக்கான இந்திய அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி. சி. சி. ஐ) அறிவித்துள்ளது. ரோகித் சர்மா தலைமையில் 15 வீரர்கள் அடங்கிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 தொடர் ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெறவுள்ளது.

போட்டியில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன.

உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் 15 பேர் கொண்ட அணியை செப்.5 ஆம் திகதிக்குள் அறிவிக்க வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை ( ஐ. சி. சி.) காலக்கெடு விதித்திருந்தது. இந்த நிலையில் இந்தியஅணி நேற்று அறிவிக்கப்பட்டது.

**அணி விவரம்:**

ரோஹித் சர்மா (அணித் தலைவர்), விராட் கோலி, ஷுப்மன் கில், ஸ்ரேயாஸ் ஐயர், சூர்யகுமார் யாதவ், ரவீந்திர ஜடேஜா, அக்ஸர் பட்டேல், ஷர்துல் தாகூர், முகமது சிராஜ், முகமது ஷமி, குல்தீப் யாதவ், இஷான் கிஷன், கே. எல். ராகுல், ஹார்திக் பாண்ட்யா, ஜஸ்ப்ரீத் பும்ரா.

## உலகக் கிண்ணத் தொடர்
# நியூசிலாந்து அணியில் கேன் வில்லியம்சன்!



வெலிங்டன், செப். 06

இந்தியாவில் நடைபெறவுள்ள 50 ஓவர் உலகக் கிண்ணத் தொடரில் நியூசிலாந்து அணியில் கேன் வில்லியம்சனும் இடம்பெறுவார் என நியூசிலாந்து அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் கடந்த மார்ச் 31ஆம் திகதி அஹமதாபாத்தில் நடந்த ஐ. பி. எல். கிரிக்கெட்டின் தொடக்க ஆட்டத்தில் எல்லைக்கோடு அருகே பந்தை துள்ளி குதித்து தடுத்த போது கீழே விழுந்ததில் வலது முழங்காலில் காயமடைந்தார்.

சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவர் தற்போது காயத்திலிருந்து மீண்டு பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றார்.

இதற்கிடையில், தான் உலகக் கிண்ணத்தில் ஆடுவது சந்தேகம் தான் என வில்லியம்சன் கடந்த சில நாட்களுக்கு முன்பு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், காயத்தால் 6 மாதமாக ஓய்வில் இருந்த கேன் வில்லியம்சன், உலகக் கிண்ணத் தொடரில் களமிறங்குகிறார் என்று அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஐ)

# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் இகா, வோஸ்னியாக்கி தோல்வி

நியூயோர்க், செப். 06

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்றில் முதல் நிலை வீராங்கனையான இகா ஸ்வியாடெக் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். இதேபோன்று முன்னாள் முதல்நிலை வீராங்கனை வோஸ்னியாக்கியும் தோல்வியடைந்தார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் மகளிருக்கான ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று போட்டியில் முதல் நிலை வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாடெக், 20ஆம் நிலை வீராங்கனையான லத்வியாவின் ஜெலினா ஒஸ்டாபென்கோவை எதிர்த்து விளையாடினார்.

ஒரு மணி நேரம் 48 நிமிடங்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் நடப்பு சம்பியனான இகா ஸ்வியாரெக் 6-3, 3-6, 1-6 என்ற செற் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

இந்தத் தோல்வியால் முதல்நிலை வீரர் இடத்தையும் ஸ்வியாரெக் இழக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இதேபோன்று, 6ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ காஃப் 6-3, 3-6, 6-1 என்ற செற் கணக்கில் முன்னாள் முதல் நிலை வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கியை வெற்று காலிறுதிக்கு முன்னேறினர்.






# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் ஜொகோவிச் இலகு வெற்றி!

நியூயோர்க், செப். 06

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஜொகோவிச் இலகுவாக காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

நியூயோர்க்கில் ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற தொடரான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

4ஆவது சுற்றில் இதில் 2ஆம் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச், 105ஆம் நிலை வீரரான குரோஷியாவின் போர்னா கோர்ஜோவை எதிர்த்து விளையாடினார். 2 மணி நேரம் 26 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜொகோவிச் 6-2, 7-5, 6- 4 என்ற நேர் செற்றில் எளிதாக வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

10ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் பிரான்சிஸ் தியாபோ 6-4, 6-1, 6-4 என்ற செற் கணக்கில் 110ஆம் நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் ரிங்கி ஹிஜிகதாவையும், 9ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் ரெய்லர் ஃபிரிட்ஸ் 7-6 (7-2), 6-4, 6-4 என்ற செற்கணக்கில் 128ஆம் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் டொமினிக் ஸ்டிரைக்கரையும் வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தனர். (ஐ)

## ஆசிய கிண்ண தொடர்
# நேபாளத்தை இலகுவாக சாய்த்தது இந்திய அணி!

பல்லேகலை, செப். 06

நடப்பு ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேபாள அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறியது.

231 ஓட்டங்கள் இலக்கை துரத்திய இந்திய அணிக்கு ஷுப்மன் கில் அணித் தலைவர் ரோகித் சர்மா இணை தொடக்கம் கொடுத்தது. இந்திய அணி 2.1 ஓவர்களின் விக்கெட் இழப்பின்றி 17 ஓட்டங்கள் எடுத்தபோது மழை குறுக்கிட ஆட்டம் தடைப்பட்டது. இதன்பின் டக்வேர்த் - லூயிஸ் விதிப்படி, இந்திய அணி 23 ஓவர்களில் 145 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதன்படி, ரோகித் சர்மா மற்றும் ஷுப்மன் கில் இருவரும் அதிரடியை கையாண்டனர். இருவரும் அடுத்தடுத்து அரைச்சதம் கடந்தனர். இதனால், இந்திய அணி 20.1 ஓவர்களில் இலக்கை கடந்து 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ரோஹித் 74 ஓட்டங்களும், கில் 67 ஓட்டங்களும் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி சுப்பர் 4 சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது. நேபாள அணிக்காக குஷால் புர்ட்டெல் மற்றும் ஆசிப் ஷேக் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் கண்டனர்.

இருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்கு 65 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். முதல் 4.2 ஓவர்களில் அவர்கள் இருவரும் கொடுத்த 3 பிடியெடுப்பு வாய்ப்புகளை இந்தியாவின் களத்தடுப்பாளர்கள் நழுவ விட்டனர். இருப்பினும் ஷர்துல் தாகூர் அவர்களின் இணைப்பை தகர்த்தார். பின்னர் தொடர்ச்சியாக 3 விக்கெட்களை கைப்பற்றி ஜடேஜா கைப்பற்றினார். அதன் பிறகு சீரான இடைவெளியில் நேபாளம் விக்கெட்டை இழந்தது. மழை குறுக்கீடு இருந்த காரணத்தால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது.

48.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 230 ஓட்டங்கள் எடுத்தது ஆப்கானிஸ்தான். அந்த அணிக்காக ஆசிப் ஷேக் 58 ஓட்டங்கள், சொம்பல் கமி 48, குஷால் புர்ட்டெல் 38, திபேந்திரா ஐரீ 29, குல்ஷன் ஜா 23 ஓட்டங்கள் எடுத்தனர். மற்றவர்கள் ஒற்றை வரிசை இலக்கங்களுடன் சரிந்தனர்.

ஜடேஜா, குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர். (ஐ)



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# மிகையில் கோர்பச்சேவ் : அமைதிக்கான முன்னோடியா? சோவியத் உடைப்பின் சூத்திரதாரியா?



முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் தலைவரான மிகையில் கோர்பச்சேவ் மேற்குலக நாடுகளுடனான பதற்றத்தைக் குறைத்தவர் என்றும், அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போர் 1980-களின் இறுதியில் முடிவுக்கு கொண்டு வந்தவரும் என்றும் மேற்குலக நாடுகளால் பாராட்டப்பட்டவர். அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கோர்பச்சேவ் கடந்த வருடம் ஆகஸ்ட் 30, 2022 இல் காலமானார்.

கோர்பச்சேவை சோவியத்தின் சீர்திருத்தவாதி என்றும், புதிய அணுகுமுறையால் உலக அரசியல் அரங்கில் 1985 இல் நுழைந்த போது ஆரம்பத்தில் ரஷ்ய மக்களும் பெரும் நம்பிக்கை கொண்டு கோர்பச்சேவை வரவேற்றனர்.

### 1990-ல் அமைதிக்கான நோபல் பரிசு

அவரின் சீர்திருத்தங்கள் மீது சோவியத் மக்களும், கிரெம்ளினும் முதலில் புதிய கொள்கைகளை வரவேற்றனர். கோர்பச்சேவ் பதவி ஏற்றவுடன் மேற்கத்திய உலகும் பொதுவாக பாராட்டினர். கோர்பச்சேவ் அரசியல் பாணியால் மாஸ்கோ மாறலாம் என்றும், அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஆதரவளித்தன.

இதனாலேயே 1990-ல் அமைதிக்கான நோபல் பரிசு கோர்பச்சேவுக்கு வழங்கப் பட்டது. எனினும், மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவாக நடந்துகொண்டதாக ரஷ்யாவில் அவருக்குக் கண்டனக் கணைகளும் எழுந்ததும் உண்மையே.

அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ரொனால்டு ரீகனுடன் நான்கு உச்சி மாநாடுகளில் கலந்துகொண்டார் கோர்பச்சேவ். 1987-ல் நடந்த சந்திப்பின் போது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஒன்றில் இருவரும் கையெழுத்திட்டனர். அதன்படி, ஐரோப்பாவில் வைக்கப்பட்டிருந்த இரு நாடுகளின் ஏவுகணைகள் அகற்றப்பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போர் 1980-களின் இறுதியில் முடிவுற்றது. அத்துடன் சோவியத் யூனியன் சிதறுண்டு பல நாடுகளாகப் பிரிந்ததும் அந்தக் காலகட்டத்தில்தான்.

### பனிப்போர் முடிவு

சோவியத் வீழ்ச்சி அடையும் கால கட்டத்திலேயே ஆப்கானிஸ்தானில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சோவியத் துருப்புகள் 1988-ல் திரும்பப் பெறப்பட்டன. அதே போல அங்கோலாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த கியூபாவும், கம்போடியாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த வியட்நாமும் தங்கள் படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் கோர்பச்சேவ் வலியுறுத்தினார்.

1989-ல் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷைச் சந்தித்த கொர்பச்சேவ், பனிப்போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவித்தார். 1980-களின் இறுதியில் இரும்புத் திரை நாடுகள் என்று மேற்கத்திய நாடுகளால் கருதப்பட்ட செக்கோஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி, போலந்து போன்ற நாடுகள் ஜனநாயகப் பாதைக்குச் செல்வதை அவர் தடுக்கவில்லை என்றும் புகழப்பட்டார்.

### பெரஸ்ட்ரோயிகா - கிளாஸ்நாத்

கோர்பச்சேவால் அறிமுகமாகிய பெரஸ்ட்ரோயிகா, கிளாஸ்நாத் இரண்டு சீர்திருத்தங்களும் சோவியத் யூனியனின் பொருளாதார, அரசியல் வளர்ச்சிக்கு உந்துசக்தியாகும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் பிரச்னைகளைத் தீர்த்ததா என்றால் இல்லை என்றே கூறலாம். இந்த சீர்திருத்தங்கள் பலனை உடனடியாகத் தரவில்லை. சோவியத் யூனியனின் ஒரு கட்சி ஆட்சியிலிருந்த அதிகார வர்க்கப் பொருளாதாரத்தைச் சந்தை பொருளாதாரம் திடீரென ஒரிரவில் மாற்றுவது இலகுவானதல்ல.

சந்தை பொருளாதாரம் முதிர்ச்சியடைய அதிக காலம் வேண்டும் என்பதால் அது வெற்றியடைவில்லை. அதனாலேயே கோர்பச்சேவால் அறிமுகமாகிய பெரஸ்ட்ரோயிகா, கிளாஸ்நாத் இரண்டு சீர்திருத்தங்களின் பலன்கள் தாமதமாகத்தான் வரும் என்பதால் அப்போது இருந்த பிரச்னைகள் குறையவில்லை என்பதும் உண்மையே.

### சோவியத் ஒன்றிய வீழ்ச்சி :

சோவியத் நாட்டில் சிறந்த பொருளாதாரம் சாத்தியமாவது உலகின் பிற பகுதிகளுடன், குறிப்பாக அமெரிக்காவுடன் சிறந்த உறவுகளைக் கொண்டிருப்பதைச் சார்ந்துள்ளது என்று கோர்பச்சேவ் நம்பினார். அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன், சோவியத் ஒன்றியத்தை அழிப்பதில் மும்முரமாக இருந்தார். மேலும் உலகெங்கிலும் இருந்த அமெரிக்க இராணுவக் கட்டமைப்பை விரிவுபடுத்தினார். இருந்த போதிலும் கோர்பச்சேவ் ஆயுதப் போட்டியிலிருந்து வெளியேறுவதாக உறுதியளித்தார்.

**உலக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கோர்பச்சேவ் கடந்த வருடம் ஆகஸ்ட் 30, 2022 இல் காலமாகி ஓர் வருடம் ஓடிவிட்டாலும், அவரைப் பற்றிய பார்வை பலவாக உள்ளன. உலக அமைதிக்காக அணுஆயுதத்தை குறைத்த முன்னோடி என்றும், சோவியத் உடைப்பின் சூத்தரதாரி என்றும் பல்வேறு கோணங்களில் அவர் பார்க்கப்படுகின்றார்.**

கிழக்கு ஐரோப்பாவில் மாற்றங்கள் சோவியத் யூனியனையும் பாதிக்கத் துவங்கியது. கோர்பச்சேவின் சீர்திருத்த அணுகுமுறையால் சோவியத் யூனியனில் இருந்த குடியரசுகளில் சுதந்திரத்திற்கான இயக்கம் தொடங்கியது.

1991 இல பால்டிக் நாடுகள் (எஸ்டோனியா, லிதுவேனியா மற்றும் லாட்வியா) ஒவ்வொன்றாக, மாஸ்கோவிலிருந்து பிரிந்து தங்கள் சுதந்திரத்தை அறிவித்தன. மாஸ்கோவில் ஆகஸ்ட் 18, 1991 அன்று, சோவியத் இராணுவத்தாலும் அரசாங்கத்திலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் கோர்பச்சேவை வீட்டுக் காவலில் வைத்தனர். இதன்பின் கோர்பச்சேவ் தலைமைபதவியை ராஜினாமா செய்வது தவிர்க்க முடியாமல் போனது. 1991 கிறிஸ்துமஸ் தினத்தன்று, அவர் தனது பதவியை விட்டு விலகினார்.





அப்போது அவர் ஆற்றிய உரையில், 'நாங்கள் இப்போது ஒரு புதிய உலகில் வாழ்கிறோம். பனிப்போர் மற்றும் ஆயுதப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நமது பொருளாதாரம், பொது அணுகுமுறைகள் மற்றும் ஒழுக்க நெறிகளை முடக்கிய நாட்டின் பைத்தியக்காரத்தனமான இராணுவமயமாக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதன் பின்னரே வலிமைமிக்க சோவியத் யூனியன் சிதைந்து வீழ்ந்தது.

மைக்கேல் கோர்பச்சேவ் சோவியத் உடைவின் பின் "சர்வதேச உறவுகளில் நாம் ஒரு சகாப்தத்தை விட்டு, மற்றொன்றுக்குள் பிரவேசிக்கிறோம், அது உறுதியான, நீடித்த சமாதானத்தின் காலப்பகுதியென நான் எண்ணுகிறேன்" எனக்கூறினார்.

### அணு ஆயுத கட்டுப்பாடு

மே 1990இல் வாஷிங்டன் டி. சியில் நடைபெற்ற வல்லரசு மாநாடு ஒன்றின் போது, சோவியத் ஜனாதிபதி மிக்கேல் கோர்பச்சேவ் ஐரோப்பிய நாடுகளின் இரண்டு கூட்டணிகளும் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என்று யோசனையை தெரிவித்தார்.

நடுத்தர குறுகிய தூரம் செல்லும் தரை சார்ந்த ஏவுகணைகளை ஒழிப்பது சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் சோவியத் யூனியன் அதிபர் மிகேயல் கோர்பச்சேவும் அமெரிக்க ரோனால்டு ரீகனும் மாஸ்கோவில் கூடியபோது நிறைவேறியது.

2000 வருடத்துக்குள் பூமியிலிருந்து அணு ஆயுதங்களை ஒழித்துவிட, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மைக்கேல் கோர்பச்சேவ் சொன்னார். இதற்கான வழி அணு ஆயுதங்களற்ற, வன்முறையில்லா ஓர் உலகமாக முன்னேறிச் செல்வதில் இருக்கிறது என சோவியத் தலைவர் மிக்கேல் கோர்பஷாவ் எழுதிய பெரஸ்ட்ரோய்க்கா நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் க்ளாஸ்நாஸ்ட் மற்றும் பெரஸ்ட்ராய்க்கா கோட்பாடுகளை செயலுக்குக் கொண்டுவருவதில் கோர்பச்சேவ்வுக்கு இருந்த ஆர்வமே, சோவியத் உடைவுக்கும், அவர் சோசலிச- கம்யூனிஸத்தை உலகில் அழிக்க அமெரிக்காவுடன் சேர்ந்து நோக்கம் கொண்டிருந்தார் என்றும் ரஷ்யாவில் இன்னமும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஆயினும் உலக அமைதிக்காக அணு ஆயுத குறைக்க முன்னோடியாக இருந்து, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கோர்பச்சேவ் வரலாற்றில் என்றும் நிலைத்திருப்பார்.

●

# பொறுப்புக்கூறல் இல்லாத வரிவிதிப்பு நிலையுறுதியற்ற ஒரு கலவை



கலாநிதி ஜெகான் பெரேரா

பெற்றோல், டீசல் விலைகள் அதிகரிப்பையடுத்து எரிபொருள் கொள்வனவுக்கான கியூ.ஆர். கோட்டா குறியீட்டு முறையும் நீக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருடத்துக்கு முன்னர் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வெளியே நீண்ட வரிசைகளில் மக்களும் வாகனங்களும் இரவு பகலாக காத்துக்கிடந்த நிலைவரம் இல்லாமல் செய்யப்பட்டமை வழமைக்கு திரும்பியதன் அறிகுறிகளில் ஒன்று. அதற்கான பெருமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவரது அரசாங்கத்துக்கும் உரியது.

கடந்த ஒரு வருடமாக மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்ட எரிபொருட்களின் விலைகள் மீண்டும் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த விலை அதிகரிப்புகள் எரிபொருட்களின் கோரிக்கை குறைவடைந்தமைக்கும் கோட்டாமுறை ஒழிப்புக்குமான முக்கிய ஒரு காரணியாகும்.

விலை அதிகரிப்புகள் வெளிநாட்டு கம்பனிகளையும் பெருமளவுக்கு கவரக்கவரக்கூடியதாக இருக்கிறது. இலங்கையில் எரிபொருட்கள் விற்பனை மூலம் பெருமளவு இலாபத்தைச் சம்பாதிக்க முடியும் என்று அந்த கம்பனிகள் நினைக்கின்றன. மறுபுறத்தில், எரிபொருட்களின் விலைகள் மாத்திரமல்ல பொருளாதார நெருக்கடிக்கு பிறகு ஏனைய பொருட்களின் விலைகளும் கடுமையாக அதிகரித்ததன் விளைவாக மக்கள்

மத்தியில் அதிகரித்த வறுமை இன்றைய யதார்த்த நிலையின் ஒரு மைய அம்சமாகும். பெற்றோல், டீசல் விலைகளின் அதிகரிப்பு ஏனைய செலவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் மக்களின் வறுமை மேலும் தீவிரமடையும்.

விலைகள் அதிகரிப்பு மக்களின் வாழ்க்கைத் தரங்களில் ஏற்படுத்திய மோசமான தாக்கத்தை அடுத்தடுத்து மேற்காள்ளப்பட்ட ஆய்வுகள் தெளிவாக வெளிக்காட்டின.

வாழ்க்கைத் தரங்களைப் பொறுத்தவரை இலங்கை சனத்தொகையின் 55 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் பாடசாலை வருகை, உடல்நிலை, வேலைவாய்ப்பின்மை மற்றும் கடன்படுநிலை உட்பட 12 குறிகாட்டிகளில் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பொருளாதாரம் மீட்சி பெற்று வருவதாக கூறப்படுவதற்கு மத்தியில் இலங்கையின் 2 கோடி 20 இலட்சம் சனத்தொகையில் ஒரு கோடி 20 இலட்சத்துக்கும் அதிகமான நெருக்கடியினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதுடன் தொடர்ந்தும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதாக ஆய்வு காட்டுகிறது. ஒரு குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்காக மக்கள் தங்களது சொத்துக்களை விற்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்.

விவசாயிகள் தங்களுக்கு அவசியமாக தேவைப்படுகின்ற உள்ளீட்டு பொருட்களைப் பெறுவதில் எதிர்நோக்குகின்ற இடையூறுகளின் விளைவாக 2023 ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட தானிய உற்பத்தி கடந்த ஐந்து வருட சராசரியை விடவும் குறைவானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் உணவு, விவசாய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு ஆய்வு கூறியிருக்கிறது.

முக்கியமான உணவுப்பொருட்களின் விலைகளின் தொடர்ச்சியான அதிகரிப்பு கணிசமான எண்ணிக்கையான குடும்பங்கள் உணவைப் பெறுவதில் எதிர்நோக்கும் கஷ்டங்களுக்கு முக்கிய காரணியாக இருக்கிறது. நாட்டில் உள்ள பெரும்பான்மையான குடும்பங்கள் கடன்களை பெறுவது மற்றும் சொத்துக்களை விற்பனை செய்வது உட்பட பல்வேறு வழிமுறைகள் மூலமாக உணவுப் பாதுகாப்பைப் பேணுகின்ற போதிலும், குறிப்பிட்ட சில பகுதிகளில் மக்கள் உணவுப்பாதுகாப்பு பிரச்சினையால் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள்.

சுமார் 39 இலட்சம் இலங்கையர்கள் உணவுப் பாதுகாப்பின்மையால் மிதமான அளவில் பாதிக்கப்பட்டிருப்பதாக 2023 ஆம் ஆண்டுக்கான பயிர்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு செயலணியின் புள்ளி விபரத்தை மேற்கோள் காட்டி உலக உணவுச் செயற்திட்டம் வேறு ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறது.

### முதல் பிரச்சினை

விலை மட்டத்தில் நிரந்தரமான அதிகரிப்புக்கு சமாந்தரமாக மக்கள் மீது சுமத்தப்படுகின்ற நேரடி மற்றும் மறைமுக வரிகளும் உயர்ந்த மட்டத்திலானவையாக இருக்கின்றன. இது ஒரு இரட்டைத் தாக்கமாகும்.

நடுத்தர வர்க்க குடும்பங்களின் மாதச்சம்பளத்தில் கணிசமான தொகையை அபகரிக்கக்கூடியதாக நேரடி வருமானவரி செலுத்த வேண்டியதற்கான தொடக்க நிலையை கீழ் இறக்கியதற்கு மேலதிகமாக பிற்போக்கான நேரடி வரிவிதிப்புகள் (வற் ) 2022 ஜூனுக்கும் செப்மெம்பருக்கும் இடையில் பெரும்பாலும் இரண்டு மடங்காக (15 சதவீதத்துக்கு) அதிகரிக்கப்பட்டன. இதன் விளைவாக சனத்தொகையின் வறிய பிரிவுகளைச் சேர்ந்தோரே இன்று வரிவிதிப்பின் சுமையை தாங்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று இலங்கை தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் கூட்டு ஒன்று அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

உணவுப் பணவீக்கம் 2022 செப்டெம்பரில் பெரும்பாலும் 95 சதவீதத்துக்கு அதிகரித்தது. கடந்த வருட இறுதியில் பணவீக்கம் 57 சதவீதமாக இருந்த அதேவேளை உண்மையான வேதனங்கள் சுமார் ஐம்பது சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டன. 2022 ஆம் ஆண்டளவில் ஐந்து இலட்சம் பேர் தொழில்களை இழந்ததாக உலக வங்கி மதிப்பிட்டிருக்கிறது.




செல்வவரி, மரபுரிமை வரி மற்றும் சொத்துவரி ஆகியவற்றையும் விதிக்கப்போவதாக இறுதியாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. வரிகளை அறவிடக்கூடியதாக அத்தகைய சொத்துக்களை வைத்திருப்பவர்களே இதனால் பாதிக்கப்படவர் என்பதால் அது நியாயமானதாக தோன்றலாம். ஆனால், இது நடுத்தர வர்க்கத்தினரில் கணிசமான பிரிவினரையும் பாதிக்கும். அவர்கள் தங்கள் சொத்துக்களை எல்லாம் பயன்படுத்தி ஒரு வீட்டைக் கட்டியிருப்பார்கள். அல்லது வீட்டைக் கட்டுவதற்கான கடன்களை மீளச்செலுத்திக்கொண்டிருப்பார்கள்.

முன்னர் குறிப்பிட்டதைப் போன்று சனத்தொகையில் 55 சவீதத்துக்கும் அதிகமானவர்கள் நெருக்கடியினால் கடுமையாக பாதிக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட ஆய்வு காட்டுகிறது.

துறைசார் நிபுணத்துவ தகைமையுடையவர்கள் அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெறக்கூடியவர்கள் தற்போதைய வரிவிதிப்புகளுக்கு பிறகு எஞ்சியிருக்கும் வருமானத்தில் செலவினங்களைச் சமாளிக்க முடியாத காரணத்தால் பெரும் எண்ணிக்கையில் வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள்.

ஏற்கெனவே முறைசார் பொருளாதார முறைமையில் இருப்பவர்களை இலக்கு வைப்பதே பட்ஜெட் பற்றாக்குறையை சமாளிக்க போதுமான வளங்களை கண்டறிவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சிகளில் உள்ள முதல் பிரச்சினையாகும். ஒப்பீட்டளவில் குறைந்த வருமானங்களைக் கொண்டவர்களையும் உள்ளடக்குவதற்கு வரி வரையை அரசாங்கம் விரிவுபடுத்துகிறது.

முறைசார் பொருளாதார முறைமையில் உள்ளவர்களும் சட்டத்தை மதித்துச் செயற்படுபவர்களுமே வரிவிதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த முறைசார் பொருளாதார முறைமைக்கு வெளியே இருக்கும் ஒரு பெரும் எண்ணிக்கையானவர்கள் மிகவும் பெருமளவு பணத்தைச் சம்பாதிப்பதுடன் தங்களது வருமானங்கள் மற்றும் சொத்துக்களுக்கு வரிகளை செலுத்துவதில் இருந்து நழுவக்கூடியதாகவும் இருக்கிறது. வெளிநாடுகளிலும்கூட இவர்கள் சொத்துக்களை பதுக்கிவைத்திருக்கிறார்கள்.

இதற்கு ஒரு உணாரணமாக விண்வெளி செய்மதி தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் கிளப்பிய ஒரு பிரச்சினையை எடுத்துக்கொள்ளலாம்.

இந்த செய்மதி திட்டத்துக்கான செலவு சந்திரனைச் சென்றடைந்த இந்திய ரொக்கட்டுக்கு செலவிடப்பட்ட தொகையையும் விட அதிகமானதாகும். இது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோது செய்மதி திட்டத்துக்கு தனியாரே நிதி வழங்கியதாக பதிலளிக்கப்பட்டது. அந்த திடடத்துக்கு நிதி வழங்கியவர்கள் வரிகளைச் செலுத்தினார்களா என்பதையும் அவர்களது வருமானங்களுக்கான மூலங்கள் எவை என்பதையும் விசாரணை செய்யவேண்டியது அவசியமாகும்.

### இரண்டாவது பிரச்சினை

பாதுகாப்பு படைகளைப் பயன்படுத்தி அரசாங்கம் முற்றுமுழுதாக அடக்கியொடுக்கிய கடந்த வருடத்தைய போராட்ட இயக்கம் மூன்று குறிக்கோள்களை மனதில் கொண்டிருந்தது. அன்றைய ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புவது முதலாவது குறிக்கோள். 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் வீட்டுக்கு அனுப்புவது இரண்டாவது குறிக்கோள். மூன்றாவது குறிக்கோள் முறைமை மாற்றத்தை ஏற்படுத்துவது.

அந்த பொதுவான போராட்டத்துக்கு தங்களது ஒருமைப்பாட்டை வெளிக்காட்ட பொது இடங்களுக்கு அணிதிரண்டுவந்த சகல வயதுகளையும் சகல பிராந்தியங்களையும் சேர்ந்தவர்கள் ஒரு இலட்சியத்தினால் பிணைக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். அந்த இலட்சியம் தொடர்ந்தும் துடிப்புடன் இருக்கிறது.

போராட்ட இயக்கத்தினால் வெளிப்படுத்தப்பட்ட மக்களின் விருப்பங்களும் அபிலாசைகளும் பூர்த்திசெய்யப்பட்டதாக சுமார் 60 சதவீதமான பொதுமக்கள் நம்பவில்லை என்று ‘ வெறைற் றிசேர்ச் ‘ சிவில் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்திருக்கிறது. மேலும் இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஊழலும் தவறான ஆட்சிமுறையும் முடிவுக்கு கொண்டு வரப்படவேண்டும் என்று 51 சதவீதமானவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பொருளாதாரச் சவால்களை வெற்றிகொள்வதற்கு போதுமான வளங்களைக் கண்டறிவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் உள்ள இரண்டாவது பிரச்னை எந்தவொரு முறைமை மாற்றமும் இல்லாதமையாகும்.

‘பிரதிநிதித்துவம் இல்லாமல் வரிவிதிப்பு இல்லை’ **(No taxation without representation)** என்பதே 1776 அமெரிக்கப் புரட்சியின் சுலோகமாக இருந்தது. இலங்கையில் அது ‘பொறுப்புக்கூறல் இல்லாமல் வரிவிதிப்பு இல்லை’ **(No taxation without accoubtability)** என்றாகிறது.

ஒரு சிறு குழுவினரின் செயற்பாடுகளின் விளைவான பொருளாதார வீழ்ச்சிக்கான விலையை மக்களில் பெரும்பான்மையானவர்கள் செலுத்திக்கொண்டிருக்கும் அதேவேளை அந்த சிறு குழு பொறுப்புக்கூற வேண்டிய சுமையில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் மீதான சுமையில் ஒரு சிறிய பங்கைக் கூட தாங்கிக்கொள்ள வேண்டும் என்று அந்த குழுவிடம் கேட்கப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் பதவிகளில் இருக்கிறார்கள்.

அதிகாரத் துஷ்பிரயோகம், ஊழல் மற்றும் தவறான நிருவாகம் உட்பட கடந்த காலத்தின் சகலதுமே அப்படியே தொடருகின்றன. ஊழல் நிலைவரம் முன்ரையும் விட மோசமானதாக இருக்கிறது என்றும் பேசப்படுகிறது.

ஜனாதிபதியும் பிரதமரும் குறிப்பிடத்தக்க விதிவிலக்காக இருக்கலாம்.ஆனால் அவர்கள் நிதி விவகாரங்களில் தூய்மையானவர்களாக இருக்கிறார்கள் என்பது மக்களுக்கு ஆறுதலைத் தந்துவிடாது. அவசர தேவைக்கான மருந்து வகைகளையோ, எரிபொருட்களையோ அல்லது பசளை வகைகளையோ கொள்வனவு செய்வதில் அதிகாரத்தில் இருக்கும் ஏனையவர்களின் சூறையாடலை மக்கள் பார்க்கக்கூடியதாக இருக்கிறது.

சமூகத்தில் விரக்தியும் ஆத்திரமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு விலை உயர்வும் வரி அதிகரிப்பும் மக்கள் - மீது மேலதிக சுமையை ஏற்றிக்கொண்டேயிருக்கின்றன.மக்கள் செய்யும் தியாகங்களுக்கு இணையான முறையில் அரசாங்கத்தில் உள்ளவர்களிடம் இருந்து பொறுப்புக்கூறும் கடப்பாடு வெளிப்படுவதாக இல்லை.இதனால் எதிர்மறையான உணர்வுகளே அதிகரிக்கப்போகின்றன.

நாடு - பயணம் செய்துகொண்டிருக்கும் திசைமார்க்கம் நேர்மறையானதாக தெரியவில்லை. மாறாக அது எதிர்மறையானதாகவே காணப்படுகிறது. தவறான முகாமைத்துவம் மற்றும் ஊழலுக்கான கூட்டுக் கட்டளைப் பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது என்பதை அதிகாரத்தில் உள்ள சகலரும் மனதில் இருத்தவேண்டும்.

விரக்தியும் ஆத்திரமும் உள்நோக்கி திருப்பப்பட்டு குடும்பங்களுக்குள் வன்முறைகள் அதிகரிக்கிறது என்பதற்கு சான்றுகள் உள்ளன.

கொள்ளைகளும் கொலைகளும் தினமும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. விரக்தியும் ஆத்திரமும் மற்றைய சமூகங்களுக்கு எதிரான கூட்டு நடவடிக்கைகளாகவும் மாறலாம். தேர்தல்களை இனிமேலும் ஒத்திவைக்கமுடியாது என்ற நிலையில் மக்களின் விரக்தியும் ஆத்திரமும் வாக்களிப்பில் நிச்சயம் பிரதிபலிக்கும். தேர்தல்கள் தொடர்ந்து ஒத்திவைக்கப்படுமானால் புதிய போராட்ட இயக்கம் ஒன்றுக்கும் அது வழிகுக்கலாம். அது சில வேளை கடந்த வருடத்தைய போராட்டத்தை விடவும் இலட்சியவேட்கை குறைந்ததாக இருக்கலாம்.

# பூநகரியில் மதுபானசாலை மக்கள் கவனவீர்ப்பு போராட்டம்!



கிளிநொச்சி,செப். 06

பூநகரியில் மது பானசாலை அமைப் பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச பொது அமைப்புக ளால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட் டுள்ளதுடன் மனு ஒன்றும் கையளிக் கப்பட் டுள்ளது.

குறித்த போராட் டமானது செவ்வாய்க் கிழமை பகல் பூநகரி - சங்குப்பிட்டி வீதி யின் பழைய பிரதேச செயலக வளாகம் முன்றில் இருந்து குறித்த பேரணி ஆரம்பமாகி புதிய பிரதேச செயலகம் வரை சென்றடைந்தது.

அதாவது, பூநகரி பிர தேசத்தின் மையப் பகுதியான வாடியடி பகுதியில் உண வகத்துடன் கூடிய மதுபான சாலை ஒன்று பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஏற்கனவே இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் அதனை மதுபான விற்பனை நிலைய மாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வருவ தாகவும் அதற்கு எதிர்ப்பு தெரி வித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பிரதேச செயலகத்தை சென்றடைந்த பேரணியின் இறுதியில் பிரதேச செயலர் மற்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கான மகஜர்களும் கையளிக்கப் பட்டுள்ளன.

இப்போராட்டத்தில் பூநகரி பிரதேசத்தை சேர்ந்த பொது அமைப்புகள் பெண்கள் வலை அமைப்பு பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# மசாஜ் நிலைய பணியாளர் வீழ்ந்து திடீர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 06

நீர்கொழும்பில் உள்ள மசாஜ் நிலையமொன்றில் பணி புரிந்து வந்த நபர் ஒருவர் திடீ ரென சுகவீனமடைந்து மருத் துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

குறித்த நபர் நேற்று முன் தினம் இரவு மசாஜ் செய்யும் போது சுகயீனமடைந்து அவ சர அம்புலன்ஸ் மூலம் நள்ளி ரவு 12 மணியளவில் நீர் கொழும்பு மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார்.

இருப்பினும், அவர் சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் உயிரிழந்தார். (ஐ)

# சஜித்துடன் இணையும் டலஸ் அணி எம்.பிக்கள்

கொழும்பு, செப். 06

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக் கள் காங்கிரஸ் கட்சியின் 13 பாராளுமன்ற உறுப்பினர்களில் 9 பேர் சஜித் பிரேமதாஸவுடன் இணைய தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

எதிர்க்கட்சித் தலைவர் தலை மையில் அமைக்கப்பட உள்ள புதிய அரசியல் கூட்டணியில் சுதந்திர மக்கள் காங்கிரஸ் இணை யாவிட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியை ஆரம்பிக்கும்.

அதில் சுதந்திர மக்கள் காங் கிரஸ் சேர்ந்த 9 பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைவார்கள்.

ஏற்கனவே புதிய அரசியல் கூட்டணியின் யாப்பு கட்சிக ளின் தலைவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது - என்றார். (அ)

# மாடு மேய்க்க சென்றவர் நேற்று சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, செப். 06

மட்டக்களப்பு, வாழைச் சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓமடியாமடு பிரதேசத்தில் மாட்டுப்பட்டி பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற ஆண் ஒருவர் செவ்வாய்க்கிழமை உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை, கிண்ணி யடி விஷ்ணு கோவில் வீதியைச் சேர்ந்த 49 வயதுடைய கந் தையா மாமாங்கம் என்பவரே உயிரிழந்தார்.

குறித்த நபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாடுகளை மேய்ப்பதற்காக வழமை போல ஓமடியாமடு பகுதியில் அமைந் துள்ள மாட்டுப்பட்டிக்கு வீட்டிலிருந்து சென்றுள்ளார்.

எனினும், அவர் நேற்று காலை வரை வீடு திரும்பாத நிலையில், மாட்டுப் பட்டியின் உரிமையாளர், அப்பகுதிக்குச் சென்று அந்த நபரை தேடியுள் ளார்.

அவ்வேளை மாட்டுப்பட் டிக்கு அருகிலுள்ள பகுதியில் அவர் உயிரிழந்து சடலமாக கிடப்பதை பார்த்துவிட்டு பொலி ஸாருக்கு அறிவித்துள்ளார்.

அதன் பின்னர், பொலிஸார் மற்றும் தடயவியல் பிரிவு பொலிஸார் சம்பவ இடத்துக் குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுவந்துள்ளனர்.

அத்தோடு, சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நீதிமன்ற உத்தரவை பெற்று, வைத்தியசாலையில் ஒப்படைப் பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வாழைச் சேனை பொலிஸார் விசார ணைகளை தீவிரப்படுத்தியுள் ளனர். (ஐ)




